# விவேகபோதினி


வருஷச் சந்தா
உள்நாடுகளுக்கு ரூ. 4
வெளிநாடுகளுக்கு ரூ. 5
தனிப்பிரதி - அ. 6

"எப்பொரு ளெத்தன்மைத்
தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."
—திருவள்ளுவர்.

விளம்பர விகிதம்
முழுப்பக்கம் ரூ. 8
அரைப்பக்கம் ரூ. 5
கால்பக்கம் ரூ. 3

தொகு XI | காளயுக்திஃ மார்கழிமீ :: 1919-ஃ ஜனவரிமீ | பகுதி 7


## முருகன் துதி

### ON GOD MURUGA

வையிற் கதிர்வடி வேலோனை
 வாழ்த்தி வறிஞர்க்கென்று
நொய்யிற் பிளவள வேனும்
 பகிர்மின்க ணுங்கட்கின்னன்
வெய்யிற் கொதுங்க வுதவா
 வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது
 காணுங் கடைவழிக்கே!

கோழிக் கொடிய னடிபணி
 யாமற் குவலயத்தே
வாழக் கருதி மதியிலிகா
 ளுங்கள் வல்வினைநோ
யூழிப் பெருவலி யுண்ணவொட்
 டாதுங்க ளத்தமெல்லா
மாழப் புதைத்துவைத் தால் வரு
 மோநும் மடிப்பிறகே?

வேலே விளங்குகை யான்செய்ய
 தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல்
 லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா
 யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளை
 யெவ்வாறு புகல்வதுவே?

பாலென் பதுமொழி பஞ்சென்
 பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற
 நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற் றமயூர
 மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங
 னேமுத்தி காண்பதுவே?

முடியாப் பிறவிக் கடலிற்
 புகார்முழு துங்கெடுக்கு
மிடியார் படியில் விதனப்
 படார்வெற்றி வேற்பெருமா
னடியார்க்கு நல்ல பெருமா
 ளவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாடிரு
 நாமம் புகல்பவரே.

நாளென் செயும்வினை தானென்
 செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
 செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
 தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்கு முன்
 னேவந்து தோன்றிடினே?

சேல்பட் டழிந்தது செந்தூர்
 வயற்பொழி றேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி
 யார்மன மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ்
 சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை
 மேலயன் கையெழுத்தே.

புத்தியை வாங்கிநின் பாதாம்
 புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க வறிகின்றி
 லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ
 குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை
 யேற்கென் குறித்தனையே.

ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டம்.

விவேக போதினி

தொ. 11] காளயுக்தி௵ மார்கழி ௴ [ப. 7

# பணமிசை பாதம்

## THE DANCE ON THE DEVIL HOOD

"காளியன் பொய்கை கலக்கப் பாய்ந்திட்டு
நீள்முடி யைந்திலும் நின்று நடஞ்செய்து
மீளவ வனுக்கருள் செய்த வித்தகன்
தோள்வலி வீரமே பாடிப்பற!
தூமணி வண்ணனைப் பாடிப்பற!"

கடவுளின் வைபவத்தை வெளியிட வரும் எவரும் அன்பின் உருவங்களாகவே விளங்க வேண்டுமென்பதை யாவரு மறுக்கமுடியாது. ஸமதிருஷ்டியும், கீழோர் மேலோர் எனப் பாராது யாவர்க்கும் உதவி செய்வதும் அன்பேயுருக்கொண்டு விளங்கும் அவதார மூர்த்தங்களுக் கன்றி மற்றவர்க்குச் சற்றுமியலாது. பேத ரஹிதரான அவரது மனத்துள் மயக்கமான எண்ணங்களெவையும்தோன்றா. மனிதர் மிருகம் எனவெண்ணாது, தம்மை நினைத்துப் பெரிதும் வருந்தும் எவ்வுயிர்க்கும் உயிரையுங் கொடுக்கும் தன்மை தெய்விகப்பிரபாவத்தின் வெளித் தோற்றமே யாகும். யாவரது துயரத்தையும் தனதெனக்கொண்டு, அத்துயரை யொழிக்க மனமொப்பி அன்போடு விளங்கும் தன்மை எல்லாற்கும் இருப்பின் தெய்விக குணம் சொல்லாமலே தழைக்கு மல்லவா? அன்பே கடவுளது உருவம். அவ்வன்பே விரிந்து படர்ந்து யாவர்க்கும் அருளாய்ப்பரந்து உலகையே காப்பது. அதனாலன்றே,

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வாகும் பிரானவன்
அன்பினுள் ளாகி யமரு மரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே

எனப் பெரியோரும் பாராட்டி யுள்ளார். பஞ்ச பூதங்களையுங் கடந்து கடவுளிடம் மயங்கும் மனோ நிலை கொண்டு வாழ்பவரது இன்ப துன்பங்களைத் தனதாக ஏற்று, அதற்கிணங்க நடக்கக் கடவுளே கடமைபட்டுள்ளாரென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. அப்படியிருப்பதனால்தான், தன்னைப் போற்றுவாரது பதவி, வர்ணம், தொழில் முதலியவற்றைக் கவனியாது, 'ஏழை, ஏதலன், கீழ்மகன் என்னாது' விளங்குவது எம்பெருமானுக்கே உரித்தாயிற்று.

இப்பெரும் தெய்விக லக்ஷணத்தையே கண்ணபிரானும் தமது சிறுவயதில் பன்முறையும் வெளியிட்டுள்ளனர். இன்றேல் அகாஸுரன் வாயில் அவர் ஏன் முந்திவிழ வேண்டும்? கையிற்கொண்ட அர்த்த அன்ன கபளத்தை உட்கொள்ள மனங்கொள்ளாது, மறைந்த ஆனிரையைஅவர்ஏன் தேடி யலையவேண்டும்? அவரது அன்பென்னும் பெரு வெள்ளம் திரண்டுபுரண்டு சிறிதும்தடையென்பதற்றுமடைபாய்ந்து விளங்குந் தன்மையை முற்றுமுணர்ந்தவரே, அவர் இளமைப் பருவப் பெருமைக் கடலில் குளிப்பவராவர்.

இளமைப் பருவமே இணையற்றது; குற்றமற்று விளங்கிக் குறையின்றி வளர்வது; கவலையின்றி, பிறரது நன்மையிலேயே உழலவது. அவ்விளமையின் தெய்விகத்தைக் காட்டித் தமது அன்பைத் திரட்டி யாவர்க்கும் பகுத்தளித்த கண்ணனது திவ்ய ஆடல்களில் யார்க்குத்தான் அன்பு செழிக்காது? தன்னினச் சிறுருடன் அவர் ஏன் அவ்வாறு பரிந்து விளையாடி அவரது கூட்டத்துத் தலைவனாக விளங்கவேண்டும்? அவரோடு உண்டும் சுகித்தும் உறவு கொண்டாடி, கண் மூடி விளையாடி, ஒருவரை யொருவர் தேடிக் கூத்தாடி ஏன் அவர் குதிக்க வேண்டும்? மான் போலும் மயில் போலும் அவர் ஏன் கவலையற்றுக் கூச்சலிட்டு அவரைக் களிப்பிக்க வேண்டும்? அவ்வாறு அவர் மனத்தை ஏன் அவர் கொள்ளை கொள்ள வேண்டும்? தம்மைக் காப்பதை யுணராதுஅவர் விளங்கும்படிகண்ணன்ஏன் மாயம் செய்யவேண்டும்? அன்றுதான் தம்மைக் கண்ணன் காத்ததாகச் சொலலிய சிறுவரிடம் கோபாலர்க்கேன் வியப்புத் தோன்ற வேண்டும்?

ஊரார் உடைமைக்குப் பேயாப் பறக்கிறான்.

யாவற்றிற்கும் அன்பே அன்ரு ஆதாரமாவது? அப்பாம்புத் தோலைக் காட்டில் ஆயப் பெரியோர் நெடுநாளாகப் பார்த்திருக்க, அன்று தான் தமது சிறுவர் வந்து தம்மைக் கண்ணன் அரவினிடமிருந்து காத்ததாகச் சொன்னால் அவர்க்கேன் அதிசயமிராது? பசுவும் கன்றும் குழந்தையுமாக அவர் அக்கோபாலரது இல்லந்தோறும் இனிது உலாவிவிளங்கினால், அம்மாயா விலாசத்தைச் சற்றே யுணர்ந்த கோபாலர் வியப்படைவதில் என்ன தவறுண்டு? எனவே, அவர் கண்ணனிடம் நீடித்த அன்பு கொண்டனரென்பது தவருகாது.

தமது ஆருவது வயதில் பலபத்ரனும் தானுமாக அப்பிருந்தாவனத்துள், கோபாலச் சிறுவர் தம்மைச் சுற்றிக் கூடி விளையாட, தமது இனிய குழலை ஊதி, அப்பசுக் கூட்டங்களைப் பக்ஷத்தோடு மேய்த்து வந்த அவரது அன்பைக் கண்ட உணர்வற்ற பொருளும் உவகையோடிருந்ததென்பது பொய்யாகாது. அச்சிறுவருடன் அப்பிருந்தாவனத்தில் அவராடிய குற்றமற்ற ஆடலை அனுபவிக்கத் தெய்விகம் வாய்ந்தவர் யாரிருந்தனர்? அவரது திவ்ய மங்கள விக்ரஹம் அக்காட்டில் மந்தஹாஸத்துடன் ஒய்யார நடையில் அசைந்தசைந்து நடந்தபோது, எதிரிலிருந்த காட்சியாவும் அவரது இணையற்ற நடையில் பிரிவற்று விளங்கின. மானும், பசுவும், மரகத கவசம் பூண்ட மரங்கள் யாவும் அவரையே கவனித்தன. அப்போதவர் மதுவுண்டு தலைதெரியாது ரீங்காரஞ் செய்யும் தேனீக்கள் போல நாதமிடுவர்; பக்ஷிகளது குரல்களைப்போலத் தானு மொலிப்பர். சிறுகுரலும் பெருகுரலும் மயங்கப் பேசுங் கிளிபோலப் பிதற்றுவர்; இனிய இசையுடன் விளங்கும் குயிலென இசைப்பர்; அனனப் பட்சிபோல் இரைச்சலிடுவர்; தாம் செய்வதைப் போல் தமது நேயர்களும் செய்யக் களித்துக் குதித்துக் கூத்தாடுவர்; மேகம் போலக் கர்ஜித்துப் பசுக்களையெல்லாம் பெயரிட்டழைப்பர்; சகோதரம், கிரௌஞ்சம், சக்ரவாகம், பரத்வாஜம் இப்பக்ஷிகளைப்போலச் சத்தமிடுவர்; சிங்கம் கர்ஜிக்கத் துயருற்றுப் பயத்தோடு அறற்றும் எளிய மிருங்களொப்பச் சிலவேளை ஒலமிடுவர்; அவரது இனிய நாதத்தைக் கேட்ட பக்ஷிகளும் மிருகங்களும் மற்றைய உயிர்களும் அப்போது உண்டாகிய நாத பிருஹ்மத்தின் மூலப் பொருளைக் காண அசைவற்று யாவும் அங்குத் தோன்றிக் குரோதமற்று விளங்கும். ஸத்வகுணம் மேலிட்டு விளங்கும் அவ்வியற்கைக் காட்சியைக் காணும் பாக்கியம் யார்க்குக் கிடைக்கும்?

இவ்வாறே ஒவ்வொரு நாளும் ராமகிருஷ்ண கோபாலர்கள் வனத்துள் சஞ்சரித்து வந்தபொழுது, தேனுகனென்னும் அசுரனைப் பலபத்திரன் கொன்று, தமது நேயரது விருப்பத்தைப் பூர்த்திசெய்து, அப்பாபி கவர்ந்திருந்த, பச்சைப் பசும்புல் தவழ்ந்து, தெங்கினம் நிறைந்து விளங்கிய அவ்வனத்தைப் பல்லோர்க்கும் பயன்படுமாறு செய்தனன். அவ்விஷயத்தை உணர்ந்து தம்மை எதிர்த்துவந்த பெரும் அஸுரப் படையையும் ராமகிருஷ்ணரிருவரும் தமது தோள் வலியால் தொலைத்துக் கோபாலரது துயரை ஒழித்தனர்; சிறுர் துதிக்க ஊரடைந்து தமது தந்தை தாயரது ஆசீர்வாதத்திற்கும் அன்பிற்கும் பாத்திரராயினர். மேலும், அவர் மடியிலிருந்து அன்போடவர் தந்த தின்பண்டங்களை யுண்டு அளவற்ற ஆநந்தக் கடலில் ஆழ்ந்து விளங்குவர். அதுவன்றே யவரது மாயை!

நிற்க, கொடுமையை யழித்து, நேர்மையை நாட்டி, உலகைக் காக்கக் கங்கணக்கட்டிய அப்பரம் பொருள், ஆயர்பாடியில் தமது திருவடி தோய விளையாடுவதிலேயே கவலையாக இருந்தனரென்பது சற்றும்பொருத்தமுடையதன்று. தமது தர்மத்தை ஓர்போழ்தும் அவர் மறந்தனரில்லை. அவரது படர்ந்த அன்பு அத்தகைய நிலைக்கு ஒருநாளும் இடந்தராதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பிறர்க்குத் தீங்கு செய்யும் பித்தரை ஒழிக்கவெனக் கங்கணங் கட்டிய அவர், எப்படிச் சும்மா இருக்கமுடியும்?

ஒருநாள் கண்ணபிரான் கோபாலர்கள் சூழக் காளிந்தி நதிக்கரைவழியே வரும்போது, சூர்யவெப்பந் தாங்க முடியாது, அக்கோபாலர் தமது பசுக்களை யோட்டிவந்து அருகிலிருந்த காளிந்திமடுவில் நீர்காட்டித் தமது தாகசாந்தி செய்துகொள்ளத் தாமும் அந்நீரைக் குடித்தனர்; ஆனால் அந்நீரைப் பருகியதும் பசுக்கள் உள்பட, அந்நீரிலிருந்த விஷம் தலைக்கேற மயங்கிக்கீழே உயிரற்றுச்சாய்ந்தனர். இக்காட்சியைக் கண்ட அடியார் துயரத்தை ஆளும் அவ்வெம்பெருமான் அவர்களைக் காக்கும் என்

ணத்துடன் பெருஞ் செயல் செய்ய நிச்சயம் செய்தனர்; உத்தரக்ஷணத்தில் கோபாலர்கள் பசுக்களுடன் உயிர்பெற்றுத் திகைக்கச் செய்தனர்; கருடனுக்கு அபராதஞ்செய்து, அவனிடம் வெருண்டு அங்கு ஒளிந்து, அந்நீரை விஷமாக்கி யாவர்க்கும் துன்பமூட்டி வரும் காளியனென்னும் ஐந்துதலை நாகனை அடக்க எண்ணங் கொண்டனர்; பக்கத்திருந்த கடம்ப மரத்தின்மீது ஏறி மார்பையுந் தோளையுந் தட்டிக்கொண்டு அம்மடுவினுள் குதித்தனர்; அந்நீரைக் கலக்கிக் குழப்பினர்; விஷங்கொண்ட அந்நீர் நுரைத்துக் கொதித்து அலையெரித்து மோதும்படி அதனுள் நீந்தினர்; தமது கால்களையும் கைகளையும் படபடப்புடன் அந்நீர்ப் பரப்பின்மேல் அடித்து அம்மடுவை நிலைகலக்கித் தத்தளிக்கச் செய்தனர். அவர் குதித்த விசையையும், கைகால்களால் தாக்கும் விசையையும் தாங்கமுடியாத அம்மடு ஆங்காங்கு நீர்ச்சுழி யிட்டுக் குமிழிகள் கிளப்பி அலைபாய்ந்து அவதி யுற்றது; அக்கருநாகக் காளியனது விஷம் பாய்ந்து, கறுத்துக்கிடந்த அந்நீர் பேரொலியிட்டுக் கதறக் கேட்ட சுற்றுப் புறத்திருந்த மலையும் மரமும் அக்கூக்குரலுக்குப் பதிலளித்தனவேனும், சற்றும் உதவிசெய்ய வகையற்றே விளங்கின. அவற்றால் என்ன செய்ய முடியும்?

மடுவிற் கிளம்பும் நீர்ச்சுழலையும், மேலெழும்பும் அடங்கா அலைகளையும், உடனுக்குடனே தோன்றித் தோன்றி யழியும் அளவற்ற நீர்க்குமிழிகளையும் கண்ட காளியன், தன்னைக் கணிசியாது தன் இடத்தைக் கவர்ந்த அவ்விளம் குழந்தை, நீரில் தவழ்ந்து படால் படால் எனக் கையையும் காலையும் இடைவிடாது வீசிவீசி நீந்துவதை அவன் கண்டதும், கடுங்கோபங் கொண்டனன். பாலிட்டு வார்த்தவர்க்கே பகைமை காட்டும் இனத்தைச் சார்ந்த அவன், தனக்கே உரியதெனத் தான் எண்ணிய இடத்தில் மற்றொருவன் வரக் காண்பது முடியுமா? பொறாமையும், கொடுமையும், கோபமும், இயற்கைவிஷமும், இவற்றுடன் அளவற்ற பலமும் கொண்ட அப்பாம்பு என்செய்யாது? ஏன் அகந்தை கொள்ளாது? கண்ணனது மர்மஸ்தானங்களி லெல்லாம் தன் விஷப் பல்லால் தீண்டிற்றெனினும், அத்தெய்விகச்சிறுவனது முகத்தில் விளங்கிய புன்சிரிப்புச் சற்றும் மங்காது, அம்முகம் மிக்க சோபையுடன் விளங்கிற்று. எனினும் மடுவோரம் நின்ற சிறார், கண்ணன் இறந்தானென்றே நிச்சயித்து விட்டனர். தனது இருப்பிடத்தைத் துவம்ஸம் செய்யக் கண்ட காளியன் கண்ணனைக் கொன்று விடுவனென்றே அவர் பயந்தனர்; நடுநடுங்கினர்; துடிதுடித்தனர்; கண்களில் நீர் ஆறாகப் பெருக்கினர்; அப்பாம்பினால் கண்ணன் பிணிக்கப்படுவதைக் காணக்காணக் கதிகலங்கினர்; மயங்கினர்; மூர்ச்சையாக அத்தரைமீது வீழ்ந்தனர். தமது பெற்றோர், உற்றோர், அனைவரையும் கருதாது கண்ணனையே உறவுகொண்டு வந்த கோபாலர் மூர்ச்சிக்கக் கண்ட பசுக் கூட்டங்கள் உரத்த குரலில் சத்தமிட்டன; பயமடைந்து மடுவிலிருந்த கண்ணனைப் பார்த்தவண்ணமாகத் தமது கண்களிலிருந்து மாலைமாலையாக நீரைவடித்து அசைவற்று நின்று விட்டன. சேதனமற்ற அவற்றால் மற்றென்ன செய்ய முடியும்?

எனினும் அப்பாம்பின் கட்டில் பட்ட கண்ணன் தமது கைகால்களைச் சிக்க விடாது கடும் விசையுடன் நீந்தி நீந்தி அம்மடுவைக் கலக்கிப் பாழடித்துக்கொண் டிருந்தனர்; விளையாட்டாகவே வினைசெய்து வந்தனர். அதைக் கண்ட தேவர்களெல்லாம் ஒன்றுந்தோன்றாது ஆகாய வீதியில் சூரியவெப்பத் திருந்தவரைக் காக்கும் குடைபோல் கவிந்துகிடந்தனர். காற்றும் அசைவற்று விளங்கியது. சூர்யன் களங்கமற்று உச்சமடைந்து கிடந்தான்; தனது வெயிலைத் தீட்சண்யமாக அப்போது பரப்பிவந்தான். அம்மடுவில் மறுகிய நீரும் கொதித்துப் பொங்கிக்கொண் டிருந்தது. எனினும் அம்பாம்பின் கட்டில்பட்ட அத்தெய்வச்சிறுவன் அம்மடுவுள் ஓயாது நீந்திநீந்திச் சுற்றிக்கொண் டிருந்தான். அவ்வேகத்தைத் தாங்க மாட்டாது, பூமி அக்கால் கிடுகிடுத்தது. மற்று விரஜைநாட்டில் அப்போதெங்கு பார்த்தாலும் பூகம்பங்களுண்டாயின; விண்மீன்கள் அளவற்று ஆகாய வீதியிலிருந் துதிர்ந்தன; ஜனங்களது தேகம்சம்பித்து அசைவுற்றது; இவைபோலும் அசுப சூசகங்கள் எங்குந் தோன்றின. எனவே அப்போது எங்குபார்த்தாலும் ஏதோ பெருங்கேடு வருவதாகவே வதந்த உலாவியது. எனினும் கண்ணன் மாத்திரம் அம்மடுவின் நீரில் அப்பாம்

பின் பிணியிலிருந்துகொண்டே அம்மடுவில் உலாவி வந்தனர்.

துச்சகுனங்களைக் கண்ட ஆயரெவரும் கலங்கினர்; கண்ணன் தனியே பலபத்ரனது துணையின்றிக் கோபாலருடன் சென்றானென அறிந்த அவர் நடுநடுங்கினர்; அவர்க்கேதோ பேராபத்து விளைந்திட்டதெனக் கவலைகொண்டனர்; துன்பக்கடலிற் பாய்ந்து துயருற்றுக் கிடந்தனர்; ஆண், பெண் சிறியர் பெரியர் என்பதில்லாமல் யாவரும் கண்ணனைக் காண ஆவலுற்றனர்; பாசம் அவித்த பரமயோகிகள், பிரமஞானவழியே தேடும் பரம்பொருளைத் தேடிக் காண அக்கோகுலமே அப்போது புறப்பட்டது. பிரிவாலும், துயராலும், காணாத ஏக்கத்தாலும் பரபரப்புக்கொண்ட அவர், தமது துயரத்தைச் சிறிதும் எண்ண இடமின்றி, அன்பு மூந்தத் தமது மனத்திற் பதிந்து தவழ்ந்து விளங்கிய மங்கள விக்ரஹத்தைக் காண அவரது பாதச் சுவட்டைத் தொடர்ந்து பதசாரியாகி அக்கரடுமுரடான காட்டுவழியேநடந்து நெடுந்தூரத்திருந்து, அவரைக் காளிந்தி மடுவிற் கண்டனர். அப்போதும் அம்மாயக் கண்ணன் அப்பாம்பின் கட்டில் பட்டு, மேலும் பரபரப்புடன் அம்மடுவில் சுற்றிச்சுற்றி நீந்திக்கொண்டிருந்தனன். எனினும் அவர் முகமண்டலத்து ஒளி சிறிதும் நீங்கிற்றில்லை; வாயிற் பூத்துவிளங்கிய புன்சிரிப்பும் மறைந்ததில்லை; அம்மடுவுள் அவர் நீந்தும் தொழிலும் ஒழிந்திற்றில்லை.

கண்ணன் மடுவில் பாம்பின் கட்டில் பட்டலைவதையும், சுற்றிலும் பசுவோடு கோபாலர்கள் அசைவற்றுநிற்பதையும், மாடுகளும்கன்றுகளும் உரக்கச் சத்தமிட்டு அலறுவதையும், அவர் நோக்க நோக்கத் தமது நினைவொழிந்து விளங்கினர். தமது மனத்திற் கினிக்கப் பேசி விளையாடும் கண்ணன், காளியன் கையிற் படுவதைக் கண்ட கோபிகள் துன்பமடைந்தனர்; கத்திக் கதறினர்; அவரின்றேல் தமக்கு வேறுலகே இன்றென அலறினர்; யசோதையின் துக்கத்தைப் பங்குகொண்டு அவளைத் தேற்றினர்; கண்ணனது அத்புதச் செயல்களைச் சொல்லிச் சொல்லி அழுது கண்ணீர் வடித்தனர்; தாம் அனைவரும் அம்மடுவில் விழுந்து உயிர்துறக்க நிச்சயித்ததைத் தெரிவித்தனர். அவர் கண்ணனிடம் கொண்ட அன்பை எற்றெனச் சொல்வது?

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு"

என்னும் பெரியார் வாக்கிற்கு, இவரல்லால் வேறு யார் பெருமைதர முடியும்? அந்நாள் கண்ணனது குறும்புகளையெல்லாம் பன்னிப்பன்னி அவரது தாயிடம் சொல்லிக் கடுகடுத்து விளங்கிய இவர், அவரது பிரிவைத் தாங்க முடியாது மடுவில் வீழ்ந்து உயிர்விட நிச்சயித்தது அதிசயமன்றே! அன்பினால் வரும் பேறும் இதுவன்றோ? எனினும் கண்ணனது உண்மை நிலையை முற்றுமுணர்ந்த பலராமர் அவரது கருத்தை யுணர்ந்ததும் அவ்வாறுசெய்வதைத் தடுத்தனர்; தமது மூல உருவை நினைத்துக் கண்ணனைத் துதித்தனர்.

கோகுல முழுதும் படைசாய்ந்து, தாமன்றி வேறு திக்கின்றி, தமக்கு எதிரில் நின்று வருந்துவதைக் கண்ட கண்ணபிரான் அவரிடம் பேரன்பு கொண்டனர்; பாம்பின் கட்டுக்குள்ளிருந்தபடியே அளவின்றி வளர ஆரம்பித்தனர். அதனால் தனக்குண்டான வலியைப் பொறுக்க முடியாது அக்காளியன் விஷத்தைக் கக்கிக் கக்கிக் கண்ணனைத் தீண்டிக்கொண்டேயிருந்தான். கண்ணனும் தம்முருவைப்பெரிதாக்கிக்கொண்டு, அவனுக்கு அளவுகடந்த துன்பமூட்டிக்கொண்டிருந்தனர். எனவே அவனுடையகட்டுக்கள்வரவரத்தளர்ந்து நெகிழ்ந்தன. பாற்கடலில் பாம்பணைமீது படுத்துப் பக்தகோடிகள் வாழ்த்த யோக நித்திரை செய்யு மாயன், மடு விடததே, நாகபந்தத்திருந்து, கோகுலமே காண விளங்கிய காட்சியும் சொல்லுந்திறத்தவன்று. எனினும், குழந்தைக் கிருஷ்ணனும் பந்தமற்ற பரம்பொருளென அப்போது அந்நிலையில விளங்கினர்.

நஞ்சுப் பற்களிலிருந்து விஷங்கக்கிக்கொண்டு அக்காளியன் உடல் முழுதும் எமபெருமானைப் பிணித்ததனால் ஏறபட்ட நோய் தாங்க முடியாது, நீரில் சுற்றியடித்த விசையால் திண்டமுண்டாடிக் கக்கிய ரத்தஞ் சிந்த, கண்கள் சிவந்து தீப்பொறி எரிக்க, கடுங்கோபங்கொண்டு, மனம் புகைந்து, நெடுமூச்சு வெளிவாங்கக் கண்ணனையே உறுத்துஉறுத்து நோக்கிக்கொண்டிருந்தனன். இவன் உறுட்டுக்கும் மிரட்டுக்கும் கண்ணன் கலங்குவன் போலும்! அதைக் கண்ட அம்மாயச் சிறுவன் அப்பாம்பைச் சுற்றிச்சுற்றிச் சுழன்றிடக் காளியனும்

ஊரில் எளியாரை வண்ணான் அறிவான்; சாதிப்பொன் பூண்டாரைத் தட்டான் அறிவான்.

Roll-109 1217 204

கடிக்கத்தக்க நல்ல ஸமயத்தை எதிர்பார்த்து, தன் நாக்குகளைத் தீட்டி கொண்டு கனவேகமாகச் சுழன்றுகொண்டிருந்தான் நெடுநேரம் அவ்வாறே அவன் அந்நீருள் சுழன்றான். எனினும் கண்ணன் தாம் முன்னினும் பன்மடங்கு ஆத்திரமும் விசையும்கொண்டு கைகளையும் கால்களையும் வீசிக்கொண்டு அம்மடுவை நாசஞ்செய்துகொண்டிருந்தனர். களைப்புற்ற காளியனால் அது முடியாதுபோகச் சற்றே மயங்கிக் கிடந்தான். கோபர்களும் கண்கொட்டாது அப்போது அங்கேயே நோக்கிக்கொண்டிருக்க, ஆதிப்பொருளே தானென்ற அறிவோடு அந்தத் தெய்வச்சிறுவன் அப்பாம்பின் தலையை நிமிர்த்து, படங்கொண்ட அதன் முடிமேல் தேவரு முணராத் தமது தெய்விகத் திருவடியை யிருத்தி, அதன்மேல் இவர்ந்து நின்று கூத்தாடி நடிக்க நினைத்தனர்.

இளந்தளிரொத்த தமது இரு கைகளையும் அகல இருத்தி வளைத்து, ஒரு காலை சற்றே தூக்கி, மறுகாலின் பாதமணி நாகமணியொளியில் பாயக் குணித்து, இளம் முறுவல் பூத்து, கண்களைச் சிமிட்டி, புருவத்தை வளைத்து நிமிர்த்துச் சுருக்கித்துடிக்க விடுத்து, நெற்றியைக் கவிந்த இளமயிர்த் தொகுதி வளைந்து குதிக்க, வெகு லாகவமாகக் கண்டாரெவரும் கண்விண்டு கிடக்க, வைரக்கல்லில் நின்று ஒளி நெளிந்து அசைந்து மனதைக் கவர்ந்து மயக்குவதுபோல, அந்நாகனது பணமுடிமேல் தகதக்க வெனத் தாள வொலிகள் ததும்பிக் கிளம்பிப் பத்துத் திசையும் பரந்து ஒலிக்க நடித்தனர்; புன்னகை பொலிந்து பரதநாத விதிப்படி தாரக நாடகம் படித்தனர். அப்போதங்கு காத்திருந்த ஸித்த சாரண கந்தர்வர் முழவு ஒலித்து தாண்டவம் பயின்று யாழிசைகூட்டி, உள்ளங் களித்தனர். தேவமாதர்கள் அக்கூத்தைக் கண்டு களிததுத் தாமும் நடித்தனர். எம்பெருமானும் சறறுங் கதி தவறாது, அச்சிறு உடலை நெளித்து நெளித்து, பலமற்றும் அகந்தை யொழியாது ஆடும் அந்நாகனது படத்தின் மீது வலமு மிடமுமாகப் பாய்ந்து பாய்ந்து பரதம் பயின்றனர்; மூக்கிலும் வாயிலும் அப்பாம்பு ரத்தங்கொட்டும்படி நடித்தனர்; தமது ஆத்மநிலையில வெட்டவெளியிலாடும் இறை வன்னன ஆடினர். அக்கால சுற்றுப் புறத்திலிருந்த கோபிகோபர்கள் கண்டு மனம் நெக்கு நெக்குருகித் தாமும் அவ்வாறே வகை மிகுதியால் துடித்து நடித்தனர். அப்பசுக் கூட்டங்களும் குதித்து விளங்கின. பக்கத்திருந்த மரங்களும் அத்தெய்விகப் பிரபாவத்தில் ஈடுபட்டு அசைந்தசைந்தாடின. அம்மடுவிலிருந்த நீரும் குதித்துக் குதித்து எழும்பிக் கூத்தாடிற்று. மற்றுச் சுற்றிலிருந்த ஸர்வஜீவராசிகளும் ஆடியவிதமே அவ்வானந்தத்தைக் கண்டுகளித்தன. அவரது நடன வைபவத்தால் பூமியும் வளைந்து வளைந்தாடியது. மலைகளும் தலைகளை யசைத்தசைத்து ஆடின. நீரருவிகளும் அலைகளை யெறிந்து நடமிட்டு நடந்துவந்தன. காற்றும் அவரோடு மயங்கி அவர்க்கிணங்க நடித்தது. உண்மையில் லோகநாதன் சிறுகுழந்தை யுருவுக்கொண்டு அப்படுவிஷங்கொண்ட பாம்பின் தலைமேல் ஞானக்கூத்தாடியபோது, உலகமே கூத்தாடியது. ஆடுபவனும் ஆட்டுவிப்பவனும் அவனேயன்றோ?

கண்ணனது பரதம் பெருகப்பெருகச் சுற்றிலிருந்த யாவரும் தமது நினைவற்று மயங்கினர். பிரக்ருதியின் அமைப்பனைத்தும் அப்படியே விளங்கின. அப்பரதவேகத்தைத் தாங்கமுடியா அக்காளியனும் அளவு கடந்த ரக்தத்தை வெளியிட்டுச் செயலற்று உணர்வற்றுக் கிடந்தான்.

ஞானக்கூத்தில் அறியாமை எப்படி நிலைக்கும்? அகந்தை எவ்வாறு ஒளிரும்? அக்கூத்தின் பெருமையை அளவிட யாரே வல்லார்? கீழ்மையும் தாழ்மையும் பாழ்க்கப் பாம்பின் தலையில் பதிந்து நடமிட்டு,

ஆனததி யாடிபபின் வைக்கூத் தாடிக்
கானததி யாடிக் கருமத்தற் றரித்தாடி
மோனச் சுழுனையு ளாடி முடிவில்லா
ஞானத்து ளாடி முடித்தானென் னாதனே.

அவ்வைபவத்தைக் காணப் பெற்றாரன்றோ கண்ணுற் பெரும் பயன் பெறுவர்? மற்றோர் கண்ணிருந்தும் புண்ணுடையர் அன்றோ

விஷ்ணுவும்சிவனும் வேறென்பர் சிலர். அது தவறு. அவரிருவரும் ஒரே மூர்த்தம்;கொண்டாடுபவர் மனத்திலதான் பேதம். ஒருவர் விச்வேசா. மற்றொருவர் ஜகந்நாதா. ஒருவா நடராஜர்; மற்றொருவர் அரங்கநாதா. ஒருவர் பேய்முலை விஷமுண்டவர்; மற்றவர் கடல் நஞ்சுண்டவர். உண்மையில கண்ணன் முக்கண்ணனன்னையா ?

ஊருக்கெல்லாம் சாஸ்திரம் சொல்லுகிற பல்லி கூழ்ப்பானையில் விழுந்தாற்போல.

# மஹாராஜா ஸர் ராமவர்மா, ஜி· ஸி· எஸ்· ஐ·

## MAHARAJA SIR RAMAVARMA, G.C.S.I.

(172-ம் பக்கத்தொடர்ச்சி)

மாஜி திவானாகிய ஸர் மாதவராயரிடம் அவர்கொண்ட உண்மை நட்பிற்கும், அடங்கா அன்பிற்கும் அளவே இல்லை. மற்று, திவான் ராமய்யங்கார் அவர்களும் அவரது பால்யகாலத்து நேயர்களில் ஒருவர். இவரன்றி சமஸ்தானத்துக்கு வெளியில் ராமவர்மரது நேயர்கள் அநேகரிருந்தனர். அவருள் ஐரோப்பியரும் பலருண்டு. மைசூர் நாடு அதன் இணையற்ற பெருமைவாய்ந்த முதன் முதல் திவானாகிய ரங்காசார்லு அவர்களை அடையும் பாக்கியம் ராஜா ராமவர்மா அவர்களின் சமயோசிதத் தொண்டினாலே யாகும். அவரே, ஆசார்யரைப்பற்றி, தமது பழைய நண்பரும், மைசூர் சமஸ்தானத்துப் பிரதான கமிஷனருமான பௌரிங் துரையவர்களுக்குச் சிபார்சு செய்து அவரைத் திவானாக நியமிக்கும்படி வற்புறுத்தினர்.

நிற்க, 1880-ம் வரு ஜூன்மீ 17வ ராஜா ராமவர்மா அவர்கள் திருவனந்தபுர சமஸ்தானத்துப் பீடாதிபதியாகத் தமது பரம்பரையாரது ஸிம்மாஸனத்தில் அமர்த்தப் பெற்றனர். அது சமஸ்தானத்துக்கே பெரும் திருவிழாவாக இருந்தது. பொது ஜனங்களது சுகதுக்கங்களைத் தமதாகவே பாராட்டி அவரது நிலைமையைக் கவனித்து, 'உயர்த்தவேண்டுமென்ற உண்மைப் பேரவாக்கொண்ட ராமவர்மர் அப்பதவியை அடைந்தால் அவர் களிப்படைவது என்ன அதிசயம்? அச்சமயம் பிரிட்டிஷ் ஸ்தானாதிபதியாரும், ராமவர்மரைப் போல் ஜனங்களது நன்மைக்கு உழைக்கத்தக்க மனோவன்மையோடு அவ்வாறுழைத்துப் பெரும்புகழடையக்கூடிய சந்தர்ப்பத்துடன சிம்மாஸன மேறினவருள் சிலரே உளரென்றும், அவ்வாறு உழைப்பதிலும் ராமவர்மர் தமது சமஸ்தானத்துக்கேயன்றி இந்திய நாடு முழுதுக்குமே பேரவாவுடன் உழைப்பரெனக் கொண்டாடியது உயர்வு நவிர்ச்சியலை. மதன் இந்தியா முழுவதும் அக்காலம அதே அபிப்ராயங்கொண்டு விளங்கிய தல்லாமல், அவரது ஆட்சியிலிருந்து தம் நாடு பெரும் லாபத்தை அடையக்கூடுமெனவும் எதிர்பார்த்திருந்தது.

ராமவர்மர் பட்டம் அடைந்ததும், முதன் முதல் தமது பழைய நாளைய நண்பரும், ராஜதந்திர நிபுணருமாகிய வெம்பாக்கம் ராமய்யங்காரவர்களைத் தமது திவானாக நியமித்தனர். இதற்கு அவர் இருவருக்குமிருந்த மன ஒற்றுமையே காரணம் போலும். மஹாராஜா அவர்கள் ஆட்சி முறையில் என்றும் மூர்த்திவிளங்கியன சீர்திருத்தங்களே. ராஜாங்கத்தின் ஒவ்வொரு இலாகாவும் தனித்தனியே கவனிக்கப்பட்டு வந்தது. அவ்வாறு செய்தது, நிர்வாக சுதந்தரம் பெற்று, குறுகிய நோக்கம் கொண்ட எவர்க்கும் பிடிக்கவில்லை. எனவே, சீர்திருத்தங்களுக்கு எப்போதும் நிர்வாககர்கள் செய்யும் தடைகளையெல்லாம் செய்து வந்தனர். எனினும், மனோ வன்மையும் பொது ஜனங்களின் நன்மையில் ஊக்கமுங்கொண்ட மஹாராஜா அவர்கள், அவரது கூக்குரலைச் சற்றும் கவனியாது, தாமும் தமது அமைச்சருமாக குறைகூறுவாரது கண்டனங்களை யெல்லாம் துண்டித்து, சமஸ்தானத்திற்கு அநேக நன்மைகளைச்செய்தனர். வாழ்க்கை அநித்தியம் என்ற நம்பிகை கொண்ட அவர், அன்றன்றைக்குச் செய்யக்கூடிய எல்லாக் காரியங்களையும் காலதாமதம் செய்யாமல் உடனுக்குடனே செய்துவந்தனர். எனினும், அவர் செய்த சீர்திருத்த முறைகள் தவறான முறையிற்செல்லாது, கன்மேல் எழுத்துப்போல் நிலைநின்று, உதவி பயத்ததை இக்காலத்தவர் எவரும் அறிவர். இம்மாதிரிச் சீர்திருத்தங்களேயல்லாமல், வேறு சில புதிய ஏற்பாடுகளையும் தமது ஆட்சியில் அவர் ஏற்படுத்தினர். முக்கியமாக, பூமிகளை அளவிட்டு, ரிவினியூ ஏற்பாடுகள் செய்ததே கவனிக்கத்தக்கது. அதுவரையும் அந்நாட்டில் செய்துவந்த எல்லா அரசாங்க ஏற்பாடுகளைக் காட்டிலும், மதியூகத்திலும் பொதுஜனங்களின் சௌக்யத்தை நிலை நிறுத்துவதிலும் ராஜாங்க வருமானத்தை ஒன்றுசேர்ப்பதிலும் அவ்வேற்பாடு சிறந்து விளங்கியது. திருவனந்தபுர சமஸ்தானம் சிறிது சிறிது பாகங்களாகவே ஜனங்களால் கொள்ளப்பட்டிருந்ததால், அதன் வருமானக் கணக்கைப்பற்றிய வியவஹாரங்கள் தலைமுறை தலைமுறையாகச் சரியாகக் கவனிக்கப்படாதிருந்

ஊருக்கு ஆகாதவன் வீட்டுக்கும் ஆகான்.

தது. இவற்றைச் சீர்திருத்தும் எண்ணம் பல அரசர்களுக் கிருந்திருந்தபோதிலும், அவ்வெண்ணத்தைப பூர்த்திசெய்யத் தைர்யமும் உண்மை ஊக்கமுங்கொண்டவர் இதுவரை எவரும் இருந்திலர். அக்கணக்குகளின் நுணுக்கங்களிடம் கொண்ட பயம் அவரை ராஜாங்க வருமானத்துக்கு நஷ்டம் வராதவரைப் பாதுகாத்து ஜனங்களது கஷ்டங்களைக் கவனிக்காம லிருக்கும்படியாகச் செய்து விட்டது. எனவே, புதிய மஹாராஜா 'சுபஸ்ச சீக்ரம்' என்ற மொழியையே தமது நோக்கமாகக்கொண்டு, மேற்படி கணக்குகளைச் சரிப்படுத்தி ஜனங்களது கஷ்டங்களைப் போக்கப் பேராவல் கொண்டு இரவும் பகலும் உழைத்து யாவரும் புகழ நடந்ததல்லாமல், நெடுநாளாகத் திருவனந்தபுரத்திற்கும், கொச்சி சமஸ்தானத்திற்கும் ஏற்பட்டிருந்த எல்லைச் சண்டையைப் பஞ்சாயத்து மூலமாக ஒழித்து, அயலிலிருந்த சமஸ்தானங்களுடன் நேசபாவத்தோடும் விளங்கினர்.

சீர்திருத்தங்களே யல்லாமல், மஹாராஜா அவர்களது உழைப்பும், அதனால் ராஜாங்க உத்தியோகஸ்தர்களுடைய மனத்தில் அவர் ஏற்படுத்திய ஒருவித மதிப்பும் கவனிக்கத்தக்கன. அவர் பட்டமடைந்த அந்நாளே வனங்களிலிருந்த வேடர்களுங்கூட நிர்வாக உத்தியோகஸ்தர்களால் தமக்கேற்பட்ட கஷ்டத்திற்கு முடிவு வந்துவிட்டதெனவே எண்ணினர். எவ்வெவ்விடத்தில் அதிகாரம் நிலைத்திருக்கிறதோ அவ்வவ்விடங்களில் முதலில் தெரியாமலும், பின்னர் தெரிந்தும் அதிக்கிரமிக்கும் ஆசை ஊன்றிவிடுவது அதிசயமாகாது. காணமுடியாது மறைந்து விளங்கும் பரிதான முதலிய துர்விநியோகங்களின் மஹிமையால் தமது ஒழுங்கைத் தவறி நிர்வாகர்கள் செய்த தவறையே முதன்முதல் கவனிக்க அவர் கங்கணம் கட்டிக்கொண்டனர். தவறினவர்களை யடக்கும் கோபத்தின் வேகத்திற் கேற்றபடியே, எந்தெந்த இடத்தில் பெருமை விளங்கியதோ, அதை மதித்துப் பாராட்ட அவர் ஊக்கங்கொண்டனர். இராஜதர்மத்தை நிலைநாட்ட அவர்போல் உழைத்தவர், இக்காலத்தில் இருக்கமுடியாதென்றே சொல்லலாம். ஊரில் எல்லாவிளக்குகளும் அவிந்த பின்னரே, தமது விளக்கை அவர் அவித்துப் படுக்க எண்ணங்கொள்வர்; மற்று ஊரில் எங்கும் சிறு வெளிச்சம் எழும்பும் முன்னரே எழுந்து அவர் தமது விளக்கைக் கொளுத்தி, உத்யோகமுறையில் தமது பார்வைக்கு வரும் சமஸ்தானத்துக்காகிதங்களையெல்லாம் கவனித்துவருவர். திவான் ராமய்யங்காரவர்கள்வெகு ஜாக்கிரதையாகப் பார்த்த இராஜாங்க விஷயமான பத்திரங்கள் யாவும் நாடோறும் மாலை ஏழுமணிக்குக் காலம் தவறாது வருவதுபோலவே, மறுநாள் கச்சேரி திறக்குமுன்னரே, அரசரவர்களால் முழுதும் அவை கவனிக்கப்பட்டு, தவறின்றி ஹஜூருக்குப் பலவித சமயோசிதத் திருத்தங்களுடன் அனுப்பப்படும். இதனுடனேயே இந்நாட்டினரல்லாமல், பல வெளிநாட்டாருடனும் அவர் கொண்ட கடிதப் போக்குவரத்தினால் அவர் நாள்தோறும் எழுதும் கடிதங்கள் பத்துத் திசையிலும் பறந்து செல்லும். சூரியன் தான் எழும்பி ஆகாய வீதியில் நடப்பதன்முன், அவர், துரகாரூடராய் வெளிக் கிளம்புவர்; ஊர்ப்புறத்தே சுற்றிப் பலவித தாவரங்களைக் கவனித்து, அவற்றின் அமைப்பு, போஷணை முதலிய வியவஹாரங்களை மேற்பார்வை யிடுவர். மீண்டதும், சந்தி ஜபம் செய்து, தர்ப்பணங்கள் முதலியன இயற்றி, தமது மூதாதையர் கூறிய ஒவ்வொரு சிறு மொழியிலும் மரியாதை பாராட்டி, அதற்கேற்ப நடந்து, தமது தேக அசௌகர்யத்தையும் கருதாது பதினொரு மணிக்கு ராஜ்ய வியவகாரங்களைக் கவனிக்க மீண்டும் ஸித்தமாயிருப்பர். தமது அரண்மனைகோவில் வியவகாரங்களையும் அவற்றின் சிப்பந்திகளைப்பற்றிய ஏற்பாடுகளையும் எள்ளளவும் விடாது கவனித்து, அவர் இடையில் மாலை இரண்டு மணிக்குத் தாகசாந்தி செய்து சற்றே இளைப்பாறுமுன், உத்தியோகமுறையில் வரும் ரிபோர்ட்டுகளும், தம்மைப் பார்க்க வருவார்களும் அவரது எஞ்சிய பகற்பொழுதைக் கொண்டுவிடும். அஸ்தமித்ததும், நித்தியகர்மானுஷ்டானங்கள் அவரது பொழுதைப் பங்குகொள்ளும். இம்மாதிரியே அவர் சற்றும் ஒழிவில்லாமல் நாள் தோறும் தவறாது நடந்துவர, அவரது மெல்லிய சரீரம் எவ்வாறு உடன்பட்டதென்பது ஆச்சர்யமே. மனமிருந்த வழியே யாவும் நடக்குமென்பதற்கு இது ஒரு சான்று போலும். நிற்க, கோயிற் திருவிழாக்களும்,

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி.

பொது சந்தர்ப்பணைகளும், கவர்னரது பேட்டியும் ஆகிய விசேஷ வியவகாரங்களைக் கவனிக்க அவருக்கு ஏற்பட்ட ஒழிவுநேரங்களே இடந் தரும்.

இவ்வாறு இவர் நாள்தோறும் உழைத்துச் செய்த காரியங்களின் அம்சங்களையும், அவற்றைப்பற்றிய தமது அபிப்பிராயங்களையும் நாள்தோறும் விடாமல் அவர் எழுதிவந்தது கவனிக்கத் தக்கது. இம்மட்டோடிராமல் அவர் தமது வழக்கப்படி படிப்பையும், சாஸ்திர விசாரத்தையும், விஷயதானம் செய்வதையும், விடாமல் விளங்கியது பாராட்டத் தக்கது. தமது அளவற்ற இராஜாங்கத் தொழில்களிடையே, புதிது புதிதாக வந்த புத்தகங்களைப்பற்றி யாவரும் அதை அறியுமுன்னரே, தமது அபிப்பிராயத்தை வெளியிட்டு யாவர்க்கும் களிப்பூட்டுவர். மலையாளத்தில் பலவித நூல்கள் எழுதவும் அவருக்கு எப்படியோ காலம் கிடைத்துக்கொண்டேயிருந்தது. பல உத்தமர்களது வாழ்க்கையைப் பற்றி அவர் அடிக்கடி எழுதியுள்ளனர். 'வித்தியா விலாஸினி' என்னும் ஒரு மலையாளப் பத்திரிகையைத் தம் ஆதரவின்கீழ் நடப்பித்து அதில் வானசாஸ்திரத்தைப்பற்றி அவர் எழுதிவந்தனர். ஆங்கிலத்திலும் அவரது சுறுசுறுப்பு, குறையாமலே விளங்கிவந்தது.

யாத்திரையிலும் அவருக்கிருந்த ஆவல் குறையவில்லை. 1882-ம் ௵ அவர் வடநாட்டிற்குப் பிரயாணம் சென்று அநேகம் பெரும் பட்டணங்களிலெல்லாம் விஜயஞ் செய்து, அவ்வவ்விடத்து ஜனங்களால் மதிப்புடன் ஏற்கப் பெற்றனர். கும்பகோணத்திற்கு வந்தபோது அவர் உயர்தரக் கல்வி விஷயத்தில் கவர்ன்மெண்டாரது உதவியின் ஆவசியகத்தைப்பற்றிப் பெரியதோர் உபந்நியாஸம் செய்தது கவனிக்கத்தக்கது. அடுத்த வருஷம், சென்னை மூலமாக வைதிக முறைப்படி காசிக்குச் சென்று, ராமேச்வர யாத்திரை செய்தனர். ராமஸேதுவைத் தரிசித்ததும் அவர்கொண்ட அளவு கடந்த பக்தியும், பேரானந்தமும் அவர் காப்டன் ஹௌலட் என்பவருக்குத் "தெய்விகம் பொருந்திய ராமஸேதுவை இன்று யான் கண்டேன். அது இயற்கையோ, தெய்விகமோ எப்படியிருந்தால் என்ன? அக்காட்சி தெய்விகக் காட்சியே" என்று எழுதியதே வெளியிடும். சுபாவத்தில், மஹாராஜா அவர்கள் ஜனங்களுடன் கலந்து விளங்கும் தன்மை வாய்ந்தவர்.

நிற்க, அவர் தம் நாட்டுச் சித்திரம், தொழில் இவைகளிடம் கொண்ட அன்பு என்னவாயிற்றென நமக்கு ஓர் எண்ணம் உண்டாகலாம். அவர் சும்மா விருக்கவில்லை. அவற்றை ஆதரிக்க அவர் வேண்டிய சிரத்தை எடுத்துக்கொண்டன ரென்பது கவனிக்கத்தக்கது. தமது பதவியிலிருந்து சமஸ்தானத்து மூலை முடுக்குகளிலிருந்த சிறப்பு வாய்ந்த இடங்கள் ஒவ்வொன்றையும் அவர் தமது தினசரிக் குறிப்புகளில் பதிந்து வந்ததல்லாமல், அக்காட்சிகளை வர்ணத்தில் சித்தரிக்கும்படி பலரையும் நியமித்திருந்தனர். தம் நாட்டுத் தொழில்கள் நாசமடையாது விளங்குமாறு நல்ல தொழிற்சாலை ஒன்றை அவர் ஏற்படுத்தினர். கொல்லம் நகரத்தில் அவர் பஞ்சாலை ஒன்றை ஏற்படுத்தி, அதைத் தக்கவாறு நடத்திவர அவர் நேர்பட ஆதரித்தது பாராட்டத்தக்கது. புனலூர் என்னும் கிராமத்தில் காகிதத் தொழில் நிலைபட்டு இன்னும் செழித்து விளங்கக் காரணம் அவரது ஆதரவே யாகும்.

ரஸாயன பௌதிக சாஸ்திரங்களில் அவர் கொண்ட பேரன்பும், அவற்றினால் தாம் அடைந்த பிரத்தியக்ஷ லாபங்களும் தூண்ட, திருவனந்தபுரக் காலேஜில் ரஸாயன, பௌதிகத்தைக் கற்பிக்கும்படி அவர் தக்க ஏற்பாடுகள் செய்தனர். அநுபவ, பௌதிக சாஸ்திரங்களில், அவர் தாம் கொண்ட பெரும் சந்தோஷத்தைப்பிறரும் அநுபவிக்குமாறு அவர் விளங்கி வந்தனர். பொழுது புலர்ந்ததும், ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களைக் கவனிப்பதில் அவர்க்கு வெகுப் பிரியம். அதிசயமான காட்சிகளை யாரும் அங்கு கவனிப்பதன் முன், அவர் கவனித்து வெளியிடுவர். இவ்விஷயங்களில் அவர் அடிக்கடி சென்னை நக்ஷத்திர ஆபீஸ் தலைவருக்குத் தந்தி, கடிதம் மூலமாக அனுப்பிய சமாசாரங்கள் வெளியிடும்.

> யாதானும் நாடாமா லூராமா லென்னொருவன்
> சாந்துணையும் கல்லாதவாறு

என்று வள்ளுவனார் வெளியிட்ட மொழியைத்தலைமேற்கொண்டு நடந்த அவரது பெரு

ஊர் கூடி செக்குத் தள்ளினாற்போல.

மையையும் புத்தி நுட்பத்தையும் சாஸ்திர பரிசயத்தையும் வெளிநாட்டார் கவனிக்க நெடுநாளாக வில்லை. முதலிலேயே சென்னை ஸர்வ கலாசங்கத்தார் அவரைத் தமது அங்கத்தினருள் ஒருவ ராக்கினர். பிறகு, தாவர விஷயங்களில் உழைத்த அவரது ஞானத்தை மதித்து லண்டன் நகரத்துப் புராதன லின்னியன் சங்கத்தார் அவரைத் தமது அங்கத்தினருள் ஒருவராக்கினர். திருவாங்கூர் சமஸ்தானம் முழுதும் பற்பல விடங்களில் காடு, மேடு, மலை வனாந்தரம் முதலியவற்றைச் சுற்றித் திரிந்து அவ்வவ்விடங்களின் சிறப்பைப் பற்றி அவர் வெளியிட்ட அனுபவத்தைப் பாராட்டி அவரைத் தமது அங்கத்தினருள் ஒருவராக ராயல் பூகோள சங்கத்தார் ஏற்றுக் கொண்டனர்.

கிரேட் பிரிட்டன் அயர்லாந்து சமஸ்தானத்து 'ராயல் ஏஷியாடிக் சங்கத்தார்' மஹாராஜா அவர்கள் சம்ஸ்கிருதத்தில் கொண்ட அபூர்வ ஞானத்தையும், அவர் பழைய இந்திய ரண சிகிச்சையைப்பற்றிச் செய்த சர்ச்சைகளையும், மற்ற பல புராதன பாவங்களைப் பரிசீலம் செய்தலையும் கவனித்து, தமது அங்கத்தினருள் ஒருவராக்கினர். லண்டன் மாநகரத்து 'ஸ்டாடிஸ்டிகல்' (கணக்குப் பரிசோதனை) சங்கத்தார் தமது நோக்கப்படி மஹாராஜா அவர்கள் செய்த சில விஷயங்களைக் கவனித்து அவரைத் தமது அங்கத்தினருள் ஒருவராக்கினர். பிரஞ்சு கவர்ன்மெண்டாரும் அவரைத் தமது பொதுக்கல்வி ஆசிரியர் ஒழுங்கில்முதல் ஏற்று, பின் பாரிஸ் நகரத்துக் கடல் நாட்டு அயல வியாபார சங்கத்தாரது அங்கத்தினராக்கினர். இவற்றிற்கெல்லாம் முந்தியதாகவே, காலஞ்சென்ற அதிமாட்சிமைதங்கிய விக்டோரியா மஹாராணியார் அவரது உண்மைஞானத்தையும், ஒழுக்கத்தின் பெருமையையும் கவனித்து 1882 ம் ௵ ஜி.ஸி எஸ் ஐ. என்னும் பட்டத்தை அன்போடு அளித்தனர். அக்கால் சென்னை கவர்னராக விளங்கிய கிராண்ட் டப் பிரபு அவர்கள் வெகு சாதுர்யமாக "உமக்காகவும் உமது பட்டத்துக்காகவும் நான் களிப்படைகிறேன்" என்றனுப்பிய தந்தியைப்பற்றி இங்கு குறித்தல் தவறாகாது.

மதியூகமும், சிறந்த ஞானமும், அனுபவ சக்தியும், உத்தம குணமும் ததும்பி விளங்கிய மஹாராஜா அவர்கள் தமது நாட்டாரது மனதுள் குடிகொண்டு விளங்கிய வைதிகக் கொள்கைகளைச் சிறிதும் புறக்கணிக்காது, தமது அறுபதாம் ஆண்டில் துலா புருஷதானம் செய்தனர். மேலும், இராஜாங்க வைதிகச் சடங்கின்படி பத்மகர்பபம் என்னும் முறைப்படி நடந்து கிரீடாதிபதி என்னும் சமஸ்தானத்துப் பட்டத்தையடைய பேரவாக்கொண்டு விளங்கிய அவரது விருப்பத்தை நடக்கவொட்டாது, விஞ்சையர் உலகத்துப் பெரியோர்கள் அவரது கல்வியும் குணமும் கலந்த பெருமையைத் தமதாக்கித் தம் நாட்டு மகுடாதிபதியாக்க 1884-ம் ௵ ஆகஸ்ட் ௴ 5௳ அவரது உயிரைக்கவர்ந்து ஜடமாகிய இவ்வுலகில் அவரது பௌதிக சரீரத்தையே விட்டுச் சென்றனர்.

வானத்தில பதிந்த ஒப்பு உயர்வற்ற பேரொளி, தனது கதியே ஓடி, மேற்பால் விழுந்து அந்தகாரத்தில் உலகையே புதைப்பது போல அக்கால் இந்நாடு அலமந்து விளங்கிற்று. எனினும், அவரது வாழ்க்கை வழியைப் பின்பற்றுவது என்னும் ஞானோதயம் கொண்ட ஹிருதயம் ஒருநாளும் அந்தகார இருளில் ஆழ்ந்து கிடக்க வேண்டியதில்லை என்பதற்கு மஹாராஜா அவர்களது வாழ்க்கையே வழி காட்டும். இது ஸத்யம்.

---

## பிரகிருதி சாஸ்திரம்

### PHYSICAL SCIENCE

நம்மைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்களின் கூட்டத்தைப் 'பிரகிருதி மண்டலம்' என்று நாம் சொல்வதுண்டு. இதையே இங்கிலீஷ் பாஷையில் 'நேச்சர்' (Nature), 'மெடீரியல் வொர்ல்ட்' (Material World), 'பிஸிகல் யூனிவர்ஸ்' (physical universe) என்று விவகரித்து வருகிறார்கள். நமது புலன்களாலுணரக்கூடிய வஸ்துவுக்குப் பதார்த்தம் என்று பெயர். ப்ரபஞ்சத்திலுள்ள வஸ்துக்களின் அமைப்பு, குணம், நிலைமை இவைபோன்ற வெளித்தோற்றம் வெவ்வேறாயிருப்பதையும், அவைகளின் தன்மை அடிக்கடி மாறிக் காணப்படு

ஊர்க்குருவிமேல் ராமபாணம் தொடுக்கிறதா ?

வதையும் நாம் நாடோறும் பார்க்கிறோம். இவ் விஷயங்களை யெல்லாம் குறித்துச் சொல்லும் தாவர ஜங்கம நூலுக்கு விரிவாய் 'நாச்சுரல் ஸயன்ஸ்' (Natural Science) என்னும் பெயர் ஆங்கிலேய பாஷையில் வழங்குகிறது. இதில் அநேக உட்பிரிவுகள் உண்டு.

(1) 'பயாலஜி' (Biology) அல்லது உயிர் நூல்:—விருக்ஷ வர்க்கம், பிராணி வர்க்கம் இவைகளின் உற்பத்தி, வளர்ச்சி, குணம், தொழில் முதலியவற்றை விவரித்துச் சொல்லும் சாஸ்திரமாம்.

(2) 'அஸ்ட்ரானமி' (Astronomy) அல்லது வானசாஸ்திரம், சூரியன், சந்திரன் நக்ஷத்திரங்கள், பிளானெட்ஸ் (Planets) என்று சொல்லப்படும் கிருகங்கள், வால் நக்ஷத்திரங்கள் முதலிய ஆகாயத்திலுள்ள மஹத்தான வஸ்துக்களின் சலனம், ஒளி, இன்னும் மற்ற விஷயங்களை விவரிக்கும் நூலாம்.

(3) கெமிஸ்ட்ரி (Chemistry) அல்லது ரஸவாதம் உலகத்திலுள்ள வஸ்துக்களின் அம்சபேதமும், அவைகள் ஒன்றோடொன்று கலந்து வெவ்வேறு வஸ்துக்களாய்ப் பரிணமிப்பதும், இவ்வித மாறுதலுக்குக் காரணமாயுள்ள வஸ்து ஸம்யோகம் என்னும் சக்தி விசேஷமும், இவைபோன்ற மற்றவிஷயங்களையும் குறித்துப்பேசும் நூலாம்.

(4) பிஸிக்ஸ் (Physics) அல்லது வஸ்து தத்வ சாஸ்திரம், ஒவ்வொருபதார்த்தமும்ரூபம் அல்லது அம்சம் மாறாமலே, தன் குணம், பருமன், காந்தி, நிலைமை முதலிய வெளித்தோற்ற விஷயங்களில், பற்பல காரணங்களால் பலவிதமாய் வேறுபடலாம் என்பதையும், நம்மைச் சுற்றிலுமுள்ள ஜடபதார்த்தங்களின் வகுப்புகளும், அவற்றின் இயற்கைப் பண்பும் சிறப்பான குணங்களும அவைகளுடைய வெளிப்படையான மாறுதல்கள் என்றும், அம்மாறுதல்களுக்குக காரணமாயுள்ள இயற்கையான சக்தி விசேஷங்கள் (Physical forces), இவைகளை ஆதாரமாய்க்கொண்டு அமைக்கப்படும் விதவிதமான யந்திரங்கள், சூழ்ச்சிகள், போக்குவரத்துக்குரிய ஸாதனங்கள், இவைபோன்ற பற்பல சமாசாரங்களைப்பற்றி எடுத்துச் சொல்லும் சாஸ்திரமாம்.

மேற்சொல்லிய நூல்கள், அதனதன் உட்பிரிவுகள், இவைகளால் போதிக்கப்படும் விஷயங்களின் பேதத்தை வரையறுத்து இன்னின்ன ஞானம், இந்தச் சாஸ்திரத்தைச் சேர்ந்தது, இன்னும் மற்றது வேறுநூல் சம்பந்தப்பட்டது என்று குறிப்பிட்டுச் சொல்ல எல்லா விஷயங்களிலும் சாத்தியமில்லாவிட்டாலும், அநேகமாய் ஒவ்வொரு நூலின் கோசரம் இன்னதென்று வித்வான்களின் மனோனுஸாரமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட சாஸ்திரங்களுள்ஒன்றுக்கொன்று ஒருவாறு சம்பந்தம் உளதாயினும், பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி இவ்விரண்டுக்குமுள்ள சார்பு மிகவும் நெருங்கியது. ஆயினும் இவ்விரண்டு நூல்களுக்குள்ள பேதத்தின் முக்கிய அம்சங்களைச் சற்றுக் கவனித்தல் அவசியம். பிஸிக்ஸ் சாஸ்திர ஞானத்தின் உபயோகமும், இச்சாஸ்திரத்தில் சாமான்யமாய் ஜனங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களின் விவரணமும், கிரமமாய்ப் பின்னர் சொல்லப்படும்.

வஸ்துக்களைப்பற்றிய ஞான நூலுக்குப் பொதுவாய் ஸயன்ஸ் (Science) என்றும், அதில் தேர்ந்தவர்களுக்கு ஸயன்டிஸ்ட்ஸ் (Scientists) என்றும் இங்கிலீஷ் பாஷையில் சொல்வது வழக்கம். மேற்சொன்ன சாஸ்திரங்களுள் ஒவ்வொன்றிலும் விசேஷப் பயிற்சியுள்ளவர்களுக்கு, அவரவர் கல்வி விஷயத்தையனுஸரித்து விசேஷப் பெயர்களுமுண்டு. உலகத்திலுள்ள பதார்த்தங்களைப்பற்றித்தெரிய வேண்டிய விஷயங்களை முக்கியமாய் அடியிற்கண்டபடி இரண்டு வகுப்புக்களாக அடக்கிப் பேசலாம்.

1. ஒவ்வொரு வஸ்துவின் உள்ளமைப்பு அல்லது முக்கிய அம்சம் எவ்விதமானது ?

2. அதன் வெளித்தோற்றம் அல்லது நிலைமை எவ்வாறானது ?

இவற்றுள் முதலாவது அம்சமாகிய வஸ்துக்களின் அமைப்பு அல்லது மூல தத்துவத்தைக் கெமிஸ்ட்ரியும (Chemistry), இரண்டாவது பாகமாகிய வெளித்தோற்ற விஷயமான ஞானத்தைப் பிஸிக்ஸும்எடுத்துச்சொல்லும்.

வஸ்துவின் அம்ச அமைப்பு இங்கிலீஷில் பாடி (body), ஸப்ஸ்டனஸ் (Substance), மாட்டர் (Matter) என்று சொல்லப்படும்.

ஊர் கஷ்டம் ஊரிலே தேர் கஷ்டம் தெருவிலே.

ஒவ்வொரு வஸ்து அல்லது பதார்த்தமும் வேறொன்றும் கலப்பில்லாத மூலவஸ்துவாயாவது, இரண்டு அல்லது மேற்பட்ட மூலவஸ்துக்கள் சேர்ந்துண்டான கலப்புத் திரவ்யமாயாவது இருக்கவேண்டுமென்பது ஸயன்டிஸ்ட்களின் கொள்கை. இதர அம்சங்கள் சேர்ந்துண்டாகாமலும், இரண்டு அல்லது அதிகக் கணக்குள்ள அம்சங்களாய்ப் பிரிக்கவொண்ணாதபடியும் உண்டாயிருக்கும் இரும்பு, வெள்ளி, பொன், கந்தகம், கரி, பிராணவாயு, பாதரஸம் இவைபோன்ற தனிமையான மூல வஸ்துவுக்கு எலிமெண்ட் (element) என்றும், அப்படிக்கல்லாமல் இரண்டல்லது மேற்பட்ட அம்சங்கள் சேர்ந்து உண்டாயுள்ளதும், அவ்வித அம்சங்களாக மறுபடியும்பிரிக்கக்கூடியகலப்புத்திரவியத்திற்குக் காம்பௌண்ட் (compound) என்றும் பெயர். உதாரணம்:— அரிசி, உப்பு, ஜலம், கண்ணாடி, காகிதம், வஸ்திரம், கரிவாயு, மரக்கட்டை முதலியன. கலப்புப் பதார்த்தத்தின் அம்சங்கள் அல்லது மூலதத்வங்கள், இங்க்ரீடியெண்ட்ஸ் அல்லது கான்ஸ்டிடுயேன்ட்ஸ் (Ingredients or Constituents) என்று சொல்லப்படும். இப்போது ஸயன்ஸ் வித்வான்களுக்குத் தெரிந்தமட்டில் உலகத்தில் சுமார் 80 எலிமெண்ட்ஸ் இருப்பதாயும், நாம் பாக்கும் லக்ஷக்கணக்கான பதார்த்தங்களெல்லாம் மேற்சொன்ன எலிமெண்ட்ஸ் இரண்டு அல்லது அதிகக் கணக்குள்ளவைகளாய் ஒன்றோடொன்று பற்பல அளவாகச்சேர்ந்து கலப்புத் திரவ்யங்களாய்ப் பரிணமித்துண்டானவையென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். மேற்சொன்ன மூல வஸ்துக்கள் ஒவ்வொன்றுக்கும் இயற்கையான குணம், சக்தி, தோற்றம், இவைகள் வெவ்வேறாயிருக்கும். இவ்வஸ்துக்கள் ஒன்று சேர்ந்து கலப்புப்பதார்த்தமாகும்பொழுது இவற்றின் குணாதிகள் அழிந்து, புதிய குணம், ரூபம் முதலியவை உண்டாகின்றன. இவ்விதமே கலப்புப் பதார்த்தங்கள் ஒன்றோடொன்றும், மூல வஸ்துக்களுடனும் சேர்ந்து புதிது புதிதான பதார்த்தங்களாய்ப் பரிணமிக்கும்போது நூதன குணாதிகள் உற்பவிக்கின்றன. இவ்வித வஸ்து ரூப மாறுதலுக்குக் கேமிகல் சேஞ்ச் (Chemical change) என்று பெயர். வஸ்துக்கள் இவ்விதம் ஒன்றோடொன்று கலந்து இதர பதார்த்தங்களாய் மாறுவதற்குக் காரணம்வஸ்துக்களின் இயற்கையாயுள்ள சக்தியின் பலாபலத்தினால்தான். இவ்விதச் சக்தி விசேஷங்களுக்கே கேமிகல் அபினிடீஸ் (chemical affinities) என்று பெயர். இம்மாதிரி வஸ்துக்கள் ஸ்வரூபம் மாறி, நூதன பதார்த்தங்களாய்ப்பரிணமிக்கும்பொழுது, அவற்றின் நிறம், காந்தி முதலிய வெளித் தோற்ற மாறுதல் உண்டானாலும் உண்டாகா விடினும், வஸ்து ஸ்வரூபம் வேறு பட்டால் இவ்வித வேறுபாடு, கெமிகல் சேஞ்ச் என்றே சொல்லப்படும். இவ்வித மாறுதல்களையெல்லாம் பற்றி விவரிக்கும் கெமிஸ்ட்ரி என்னும் சாஸ்திரத்தின் முக்கிய தத்வம் ஒன்றுண்டு. இது பற்பல பரிசோதனைகள் மூலமாய் ஆராய்ந்து ஸித்தாந்தமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, ப்ரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்கள், க்ஷணேக்ஷணே மாறிமாறி நூதன வஸ்துக்களாய்ப் பரிணமித்துக்கொண்டிருந்தாலும், அவைகளின் மொத்த நிறை அளவு எப்போதும் ஏற்றக் குறைச்சலில்லாமல் ஒரே மாதிரியாயிருக்கும் என்பதே. ஒரு ஸமயமுள்ள வஸ்துக்கள் மற்றொரு காலத்தில் வேறு வஸ்துக்கள் ரூபமாயிருக்க கூடியதாயினும், முன்னிருந்த வஸ்து ஸமூகத்தின் நிறையும் மற்றொரு காலத்திலுள்ள பதார்த்தக் கூட்டத்தின் நிறையும், ஒன்றாகவேயிருக்கும். வஸ்துக்கள் ஸ்வரூபம் மாறும்போது அவைகள் சிருஷ்டிக்கப்படுகின்றனவென்றாவது நாசமடைகின்றனவென்றாவது சொல்லவொண்ணாது. இவ்விதம் ப்ரபஞ்ச பதார்த்தங்கள் நிலைமாறினும், நிறைமாறாத் தன்மையை இங்கிலீஷ் பாஷையில் கான்ஸர்வேஷன் ஆப் மாட்டர் அல்லது மாஸ் (Conservation of matter or mass) என்று சொல்லுவார்கள்.

ஐரோப்பிய மஹா யுத்தம்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

பத்திரிகைகளால் புகழப்பெற்றது

256-பக்கங்கள் : : 58 படங்கள்

விலை ரூ ஒன்று

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

ஊர்ப்பிள்ளையை முத்தமிட்டால், உதட்டுக்குக் கேடு.

# தர்மம் (கடமை)

## DUTY

பிறர் உனக்கு என்னென்ன செய்யக்கூடாது என்றுகருதுகிறாயோ அவை யொன்றையும் பிறருக்கு நீ செய்யாதே. இதாரது நிலையில் நீயும், உன் பதவியில் அவர்களும் இருக்க நேர்ந்தால், அவர்களால், நீ அடைய விரும்பும் நன்மை யாவற்றையும் எப்போதும் பிறர்பாற் புரிவாயாக. ஸ்வயநல மறந்து, பிற உயிர்களின் பொருட்டே ஸர்வ கார்யங்களையும் புரியக்கருதுவாயானால், வெவ்வேறு போல் தோன்றி விளங்கும் ஸர்வத்திலும் உள்ள உண்மைப் பொருள் ஒன்றே என்று அறி. முணுமுணுக்காமல் முழுமனத்துடன் பலனைக் கோராது புரியும் தொழிலால் பிறக்கும் களிப்புக்கு ஓர் அளவேயில்லை. அத்தகைய உழைப்பில் அமர்கையில் மனப்பேயின் கொட்டம் முற்றிலும் அடங்கும். நடந்துபோன விஷயங்களைப் பற்றி வருந்தாமலும், இனிவரும் கஷ்டஸுகங்களைப்பற்றி யோசிப்பதிலேயே வீண்காலம் போக்காமலும், தன்னயங் கோருவதை யொழித்து, எவ்விதத்திலும் மிகவும் தாழ்வடைந்திருக்கும் இழிகுல மக்களை உய்வித்துயர்த்துதற்குரிய வழிகளைத் தேடி யியற்றுவதில் முழுப்ராணனையும் செலுத்தி ஆயுளைச் செலவிடுவதே கடமையாகக் கொண்டாலன்றி மனவமைதியும் மோக்ஷ ஸாம்பிராஜ்யமும் கைகூடுமா? அல்ப ஆயுள் வாய்ந்த பேதை மானிடனே! எண்ணிறந்த விதவைப் பெண்கள் ரக்தக் கண்ணீர் ஆறாய்ப் பெருக்கியும், தந்தை தாயரை யிழந்து ஆதரிப்போரின்றித் தவிக்கும் ஆயிரக் கணக்கான குழந்தைகள் கல்லு மிரும்பும் உருகும்படி கூக்குரலிட்டழுதும், லக்ஷக்கணக்கான மாந்தர், பசியாதியாம் பிணிகளால் வாடி வதங்கி உயிர் துறந்தும் வருகையில், நீ மாத்திரம் வயிறு வெடிக்க விலாப்புடைக்கத் தின்று கொழுத்துச் சிற்றின்பமே பேரின்பமாகக் கருதி, பரோபகாரசிந்தனை மறந்து, உன்னை யணுகும் மெலிந்தோர் இரந்தோர்களை மிரட்டியும் அதட்டியும் வருவதோ ஆத்மஞானம் அடையும் மார்க்கம்? கோவில்களில் கொந்தளிப்புடன் நீ காணக் கருதும் ஸச்சிதானந்த மூர்த்தியானவர் ஸர்வாந்தர்யாமியாய் ஸர்வ தேஹங்களிலுமிருப்பதாய் அறியும் நீ, தெருக்கள் தோறும் அலையும் (பரமாத்ம ப்ரதிபிம்ப) ஜீவர்களைப் பசியாதி கொடுமைகளினின்றும் காக்க நினைப்பதாவதுண்டா? குருவிக்குத் தக்க ராமேச்வரம் என்பதுபோல், உன்னால் இயன்ற உபகாரமாவது உன்னிலும் ஏழையாயுள்ளோர்க்குத்தினந்தோறும் செய்து வருகின்றனையா? கார்யத்தில் சூன்யமாயிருந்து வாய் வேதாந்தம் பேசுவதால் ஏது பயன்? உன்னிலும் வேறுபோல் காட்டி, உள்ளும் புறமுமாக எங்குமிருந்து, உன்னை இயக்கிவரும் பரந்தாமனை அறிய விரும்புவையேல், உனது என்ற வஸ்துக்கள் அனைத்தையும் விற்றுப் பெற்ற பணத்தை அரைவயிறு, கால்வயிறு, மூன்று நாளுக் கொருவேளை உணவு ஆகக் கிடைத்தால் அதுவே ஸ்வர்க்கம் எனக் கருதிக் கிடக்கும் கோடிக்கணக்கான ஏழைகளின் உதர மனோ போஷணார்த்தம் கொடுத்துவிடு. அயலார் சிசுக்களையும் தனதாகப் பாவித்துக் காக்கும் பாரத மாதாவின் வயிற்றில் உதித்தும் கூட, கொடும் பசியால் இறந்தும் உழன்றும் வரும் இஜ்ஜீவ கோடிகளது தேஹத்தில் ஓடும் ரக்தமும் சதையும் உன்னுடையதே யல்லவா! ஊர் ஊராய் வீடு வீடாய்ப் போய் பிச்சை யெடுப்பதால் சேரும் பொன், வெள்ளி, தாமிரம், தான்யம் ஆதிகளைப் பெருக்கி, பசியின் கொடுமையால் ப்ராணனை யிழக்கும் ஜீவர்களை ஆங்காங்கு ரக்ஷிப்பது தேசாபிமானியின் கடமையல்லவா! அகதிகளான அபலைகள் வசிக்க விடுகளும், கூன் குருடு செவிடு மூடம் ஆதியாம் பிறவிக்குறையாளர் குடியிருக்க இல்லங்களும் ஊர்கள் தோறும் அமைப்பதுடன், அவர்களுடைய உதரபோஷணம் கல்வி, கலாப்பயிற்சிகளின் பொருட்டு, பொது ஜனங்களிடமிருந்து பொருள் சேர்ப்பதால், ஏழை மாந்தர் யாவரையும்கோவில்மடாதிகளில் கூட்டி அவர்களுக்குப் பணச் செலவின்றியே தேஹ மனோ புத்தியாதிகளின் வளர்ச்சியை ஓங்கச்செய்யும் கல்வி புகட்டுதல் வேண்டும். தேசபக்தி பாராட்டுவது ஒருபோதும் குற்றமாகக் கருதக்கூடாது. ஜயபக்தியை ஒருபோதும் இழக்கக்கூடாது. தேச நன்மையின் பொருட்டு உடல் பொருள் ஆவியையும் இழக்கச் சித்தமாயிருக்க வேண்டும். பசியால் நொந்து பரிதபிக்கும் ஏழையைக் காண்கையில் அவனுக்குக் கொ

டாமல் உன் வயிற்றை நிரப்பாதே. பகவானைக் காண எண்ணங் கொண்டமையால் ஸர்வத்தையும் துறந்த ஸன்யாஸிகள், ஞானிகளை அத்யந்த பக்தியுடன் ஆதரி. தமது ப்ராரப்த கர்மத்தின் குரூரத்தாலோ அல்லது பொது ஜனங்களின் இரக்கமற்ற கவனமின்மையாலோ, ஆற்றொணாப் பசியின் கொடுமையை நீடித்து அனுபவிக்கும் கணக்கற்ற இந்தியர்களின் பரிதாபநிலைமையை ஸதாகாலமும் நினைவுறுத்தும் பொருட்டு, கடைசி கவளம் மாத்திரம் உனக்கு வைத்துக்கொண்டு மற்ற உணவு முழுவதையும் ஏழைகளுக்கு அளித்துவிடு. நாலுநாள் பட்டினி கிடந்த பிறகு கிடைத்த சிற்றுணவை, பசியின் கொடுமையால் தனக்களிக்கும்படி கேட்டவோர் பரதேசிக்குக் கொடுத்து அவன் திருப்தி அடையாமல் மறுபடி கேட்க, அன்புடன் தமது பாகங்களையும் ஈந்து பட்டினியாய் உயிர்துறந்த மனைவி மக்களுடன் இதர தேஹ போஷண நிமித்தமாய்த் தன் ப்ராணனையும் விட்ட (மகாபாரதத்தில் கூறியுள்ள) ப்ராஹ்மணனை ஒரு போதும் மறவாதே.

தேசத்தின் ஒற்றுமை, க்ஷேமம் இவற்றிற்கு விரோதமாக உழைத்துவரும் அறிவிலிகளான இருகால் விலங்குகளால் விபரீதம் யாதும் விளையாவண்ணம் மன்னனும் மன்னுயிர்களும் ஒன்று சேர்ந்து காப்பாராக. அரசன் மாத்திரமேயன்றி, அமைச்சர் ப்ரதானிகள், பொதுஜன நன்மைக்காக உழைக்கும் சங்கத்தினர் ஆகிய அனைவருமே இறந்தபின், தாம் உயிர்த்திருந்தபோது செய்த குற்றங்கள், (செய்யக் கடமைப்பட்டிருந்தும்) செய்யா தொழிந்த நன்மைகள் இவற்றிற்காகக் கடவுளுக்கு ஜவாப் சொல்ல வேண்டியிருப்பதால், தேசத்தில் நிறைந்துள்ள அந்யாயங்கள், ஏழ்மை, பொறுக்க முடியாத பலவித கஷ்டங்கள் அனைத்தையும் பகவானது ப்ரதிநிதியாய் இம்மண்ணுலகில் வீற்றிருக்கும் வேந்தனிடம் முன்னமே தெரிவித்து, பல்லுயிர்களின் துயர்களைப் போக்குவதற்குரிய வழிகளைத் தேடியியற்றும்படி காவலனைத் தூண்டுவது ப்ரஜைகளின் கடமையேயாகும் தசரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரராய் அவதரித்த (ஸகல லோக ரக்ஷகரும் ஸர்வ ஜீவதயாபரருமாகிய) ஸ்ரீராம சந்திர மூர்த்தியானவர், ராஜ்ய விஷயங்களுடன் எவ்வித ஸம்பந்தமும் இல்லாத வண்ணான் சொல்லைக் கேட்டதும், தமதுயிர்க்குயிரான சீதாபிராட்டியைக் காட்டுக்கனுப்பியதை அறிந்த நாம், நமது கஷ்டங்களை இறைவனிடம் முறையிட்டுக் கொள்வதற்கும் வழியற்று விழிப்பது பூர்வ விதியின் பயனேயோ? விதியை ஆக்குவதும் போக்குவதும் மதியேயென்றறியும் யாம், ஸ்ரீ கிருஷ்ண பகவான் கட்டளையிட்டபடி கர்மபலனைக் கோராமலும் சோம்பேறியாயிராமலும் நமது கடமைகளைப் பூர்ண அன்புடன் இயற்றி வருவோமாயின் ஈசன் அருள் அடைவது திண்ணம்.

---

# செடிகளின் உயிர் வாழ்க்கை

## PLANT GROWTH

ஒரு செடியானது ஜீவனுள்ள வஸ்துவென்றும், அது உணவு அருந்துகிறதென்றும், சுவாசிக்கிற தென்றும், வளர்கிறதென்றும், அதன் காலம் முடியும்போது செத்துப் போகிறதென்றும் நமக்குத் தெரியும். ஆனால் சரீர ஆரோக்கியமுள்ள எந்தச் செடியும் தன்னைப் போன்ற புதுச்செடிகளை யுண்டாக்குவதற்கு, அதாவது தன் இனத்தைப் பல்கிப் பெருகச் செய்வதற்கு, வேண்டிய காரியங்களைச் செய்து முடிக்குமுன் சாவதில்லை. அநேகமாகச் செடிகள் வளர்ந்தபின், பூத்துக் காய்த்து விதைகளை யுண்டாக்குகின்றன. இவ்விதைகளில் ஒரு சிறு இளஞ்செடியின் பயிர் முளையும், அதற்குக் கொஞ்ச நாளைக்கு வேண்டிய ஆகாரமும் அடங்கியிருக்கிறது. தாவரவர்க்கங்கள் தங்கள் ஜீவகாலத்தில் நடத்தும் சகல தொழில்களின் நோக்கமும் தன் இனத்தைப் பல்கிப் பெருகச் செய்வதற்கு அவசியமான விதைகளை யுண்டாக்கி அவைகள் முளைத்துப் பயிராகி மறுபடியும் விதைகளை யுண்டாக்க ஏதுவாயிருக்

ஊழிக்காய்ச்சல் அதிகமானால் குனியக்காரன் கொள்ளை.

கும்படி மண்ணில் சிதறுண்டு விழுங்கவுடனே செடிகள் அநேகமாய்ப் பட்டுப்போகின்றன.

ஆகையால் நமது உபயோகத்துக்காகச் செடிகளைப் பயிராக்கவேண்டுமானால், அநேகமாய் விதை விதைத்தே பயிராக்குகிறோம். ஆனால் இப்படிச் செய்வதில் அதிக ஜாக்கிரதை அவசியம். விதையை எடுத்து நிலத்தில் ஊன்றிவிட்டால் அதில் நல்ல பயிர் உண்டாகிவிடுமென்று நினைப்பது பிசகு. ஒரு வயலிலுள்ள செடிகளில், சில பருத்துத் திடமாய் வளர்ந்திருப்பதையும், சில பலமில்லாமல் நோய்ந்து மெலிந்திருப்பதையும் எல்லோரும் காணலாம். ஒரு செடிக்கு ஒத்துக்கொள்ளாத நிலத்தில் அதை நட்டால், அது மெலிந்து நோய்ந்து போகிறது. பலமில்லாமல் மெலிந்து நோய்ந்திருக்கும் ஒரு செடியின் விதையை எடுத்து விதைத்தால், அதினின்று உண்டாகும் செடியும் இப்படியேதான் நோய்ந்து மெலிந்து போகும். ஒரு குடியானவன் நல்ல பயிரை உண்டாக்க விரும்பினால், அவன் அதிகமான விளைச்சலைக் கொடுத்த நோயற்ற திடமான செடிகளிலிருந்து விதைகளைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

ஆனால் வித்திலிருந்துண்டாக்கப்பட்ட செடிகளுக்கு அவைகளின் தாய்ச் செடிக்குள்ள குணங்களே அமையுமென்று எண்ணக் கூடாது. நார், புளிப்பு இல்லாத ருசியுள்ள மேன்மையான பழங்களைத் தரும் ஒரு மாமரத்தின் விதைகளை எடுத்து விதைத்து மரமுண்டாக்கினால் அம்மரத்தில் பழுக்கும் பழங்கள் சில சமயங்களில் நாரும், புளிப்புமுள்ளவைகளாயிருக்கின்றன.

வேறு விதங்களிலும் செடிகளைப் பயிராக்கலாம். கருணை, சேனை முதலிய கிழங்கு வகைகளைப் பாருங்கள். இவைகள் வளர்ந்து கிழங்கு பருத்தவுடன் செடிகள் பட்டுப்போகின்றன. ஏனென்றால் அவைகளின் வேலை முடிந்துவிட்டது. கொஞ்சநாட்கள் கழித்தால் அந்தக் கிழங்குகளிலிருக்கும் முளைக்கண்களிலிருந்து புதுச்செடிகள் முளைத்து வளரும். அவைகளை அப்படியே விட்டுவிட்டால் மிகவும் நெருக்கமடைந்துபோவதால் செழித்து வளரமாட்டா. ஆகையால், அந்தக் கிழங்கைத் தோண்டி எடுத்து, முளைக்கண்கள் இருக்கும் பாகங்களைத் துண்டித்து நடுகிறோம். இப்படி நட்ட ஒவ்வொரு துண்டிலிருந்தும் ஒவ்வொரு தனிச்செடியுண்டாகிறது. இவைகளைச் சற்று இடைவிட்டு ஒவ்வொன்றாக நடுகிறோம். அப்படிச் செய்வதால் அவைகளில் ஒவ்வொன்றுக்கும் வேண்டிய ஆகாரமும் காற்றோட்டமும் சரியானபடி கிடைக்க ஏதுவாகும்.

அருகம் புல்லானது, நிலத்தின்மேல் படர்ந்து கொஞ்சதூரம் சென்றவுடன் அதன் மெல்லிய தண்டிலிருந்து இளங் குருத்துகள் உண்டாகின்றன. அப்படிக் குருத்துண்டான விடத்தில் வேர்விழுந்து மண்ணுக்குட்செல்லுகின்றது அவ்விடத்தில் ஒரு தனிப் புல் செடியுண்டாகிறது. தாய்ச் செடியிலிருந்து சற்று தூரத்தில் இது வேர்விட்டு வளர்வதால் அதன் சமீபத்தில் நெருங்கியிருந்தால் கிடைக்கக் கூடியதைவிட அதிக ஆகாரம் இதற்குக் கிடைக்க ஏதுவுண்டாகிறது.

சில செடிகளில் மண்ணுக்குள் புதைந்து வேர்விட்டிருக்கும் தங்கள் கிளைகளிலிருந்து நூதனமான கன்றுகளை உற்பத்தி செய்கின்றன. காலம் வரும்போது, முன்னுண்டாயிருந்த செடிக்கும் நூதனமாயுண்டான கன்றுக்கும் மத்தியிலுள்ள கிளை அழுகிக் கெட்டுப் போகிறது. அதன்பின் நூதனமாய் உண்டான செடி தனியாய் ஜீவித்து வளரக்கூடியதாகின்றது. திருஷ்டாந்தமாக வாழை மரத்தைப் பாருங்கள். அதன் அடித் தூரிலிருந்தே கன்றுகளை உற்பத்திசெய்யும் மார்க்கம் அதற்கிருப்பதால் அது விதைகளையுண்டாக்குவதில்லை.

இஞ்சிச் செடியொன்றைத் தோண்டிப் பார்த்தால் அதன் தூர்க்கிழங்கில் அநேக முளைகள் உண்டாகியிருப்பது தெரியும். இம்முளைகள் அதன்பின் மேற்கிளம்பிவளர்ந்து பெரிதாகும். ஒரு முளையுடனிருக்கும் இஞ்சுத் துண்டை வேறாக நறுக்கி அதை நட்டால், அதிலிருந்து பழைய இஞ்சித் தூரிலிருந்து உண்டாவது போலவே புதுச்செடி யுண்டாகும். சில செடிகளில், தண்டு அல்லது கிளைகளிலிருந்து முளைக் கண்களுள்ள துண்டுகளை வெட்டி மண்ணில் புதைத்து நூதனப் பயிர் உண்டாக்குகிறார்கள். இந்தத் துண்டுகளின் கணுக்களிலிருந்து முளைகள் கிளம்பிச் சீக்கிரத்தில் வேர்விட்டு வளர, பயிர் உண்டாகின்றது.

இவ்விதமாகத்தான் கரும்பு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு முதலான செடிகள் பயிர்செய்யப்படுகின்றன. இதுவும் ஒரு நல்ல வழிதான். ஏனெனில், இப்படிக் சணுத் துண்டுகளிலிருந்து பயிர் செய்யப்பட்ட செடிகளுக்கு அதன் தாய்ச் செடிக்குள்ள குண விசேஷங்கள் முழுவதுமிருக்கும்.

இப்படிக் கணுத்துண்டுகளை வெட்டி வைக்காமல் தாய்ச்செடியின் தூரிலிருந்துண்டாகும் இளநாற்றுகளைப் பெயர்த்து வேறிடத்தில் நட்டாலும் புதுப்பயிர் உண்டாக்கலாம். இந்தச் செடிகளில் அநேகமாய் விதைகள் உண்டாவதில்லை. கரும்பு, கதிர் வாங்கிப் புஷ்பிக்கும். ஆனால் அந்தக் கதிரிலுள்ள விதைகளை எடுத்து விதைத்தால் நூற்றுக்கு ஒன்றிரண்டு கூட முளைத்துப் பயிராவது பிரயாசம். அவைகள் கணுத்துண்டுகளின் மூலமாகப் பல்கி தம் இனத்தை வளர்ப்பதால் அவற்றில் பலிதமுள்ள விதைகள் உண்டாக வேண்டிய அவசியமில்லை.

கணுத்துண்டுகளை வெட்டி மண்ணில் நடுவதைப் போலவே, வேருடன் வளர்ந்து கொண்டிருக்கும் மற்றொரு செடியின் கொம்புகள் அல்லது கிளைகளில் பொருந்தி வளரும்படி செய்யலாம். இப்படிப் பொருந்தி வளரச் செய்வதில் கிளைப்பொருத்தம், முளைப்பொருத்தம் இவ்விரண்டு வகைகளிலும் செய்யலாம். கிளையை வெட்டி மண்ணில் நட்டால், எளிதில் முளைத்து வளராத அநேகம் செடிகளில் கிளைப்பொருத்தம் அல்லது முளைப்பொருத்தம் செய்தால் எளிதில் பயிராகும். மேலும் இப்படிப் பொருந்த வளர்த்த ஒட்டுக்கண்கள் விதையிலிருந்து உண்டான மரங்களைவிட சீக்கிரத்தில் காய்க்கத் தொடங்குவதன்றி, தாய்ச்செடியின் பழங்களுக்கு என்ன விசேஷ குணங்களுண்டோ அந்தக் குணங்களெல்லாம் அதற்கும் இருக்குமென்ற நிச்சயமுண்டு. இவ்விதத்தில், நமக்கு மிகவும் பிரியமானபழவர்க்கங்களை அதிமாக விருத்திசெய்து கொள்ளலாம். இப்படிச் செய்யாமல், விதை போட்டு உண்டாக்கினால் அந்தக் கண்களில் ஒட்டுக கண்களின் பழங்களைப்போல விசேஷ குணருசியுள்ள பழங்கள் திட்டமாய்க் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

முளைப் பொருத்தம் என்பது குருத்து முளையொன்றை ஒரு நல்ல ஜாதி மாத்திலிருந்து வெளித்தோலுடன் அறுத்தெடுத்து, விதையிலிருந்துண்டான ஒரு செடியின் வெளித்தோலைக் கொஞ்சங் கீறிப் பிளந்து அதில் முன் நல்ல ஜாதிமரத்தில் அறுத்தெடுத்த குருத்து முளையைப் பொருத்தி தோலிணைகளில் கொஞ்சம் மெழுகைத் தடவி, ஒரு நூல் கயிறு கொண்டு முளைக் குறுத்து விழுந்துவிடாமற் கட்டிவைப்பதுதான். கிளைப்பொருத்தமாவது, வேர்விட்டு வளர்ந்திருக்கும் ஒரு செடியின் கிளையில் கத்தியால் பட்டையுடன் கொஞ்சம் வெட்டியெடுத்துவிட்டு அதில் பொருந்தும்படியான விதமாய் நல்ல ஜாதிக் கிளையொன்றை அறுத்து சீவி, முன் வெட்டியிருக்கும் கிளையிற் பொருத்திக் கயிற்றால் கட்டி, பட்டை இடைகளில் மெழுகு தடவி, களிமண்ணைப் பொருந்திய பாகம் முழுவதிலும் தடவிவைத்தல்.

---

பக்தி செய்வதற்கு நம்பிக்கையே முக்கிய காரணம் 'தெய்வத்தைப் பிரார்த்தித்தால் அது நம்மைக் காப்பாற்று மென்னும் நம்பிக்கை ஒவ்வொரு பக்தனுக்கு மிருக்கவேண்டும். அவ்வித நம்பிக்கையில்லாமல் பக்தி செய்கிறவன், ஒருநாளுங் கடைத்தேற மாட்டான். மங்கோ என்னும் ஓர் வெள்ளைக்காரன் சில வருஷங்களுக்கு முன் ஆப்பிரிக்கா கண்டத்தில் ஓர் பாலைவனத்திற் செல்லுகையில் பகல் பதினைந்து நாழிகை யாயிற்று. சூரியோஷ்ணம் பொறுக்க முடியவில்லை. தாகத்தின் கொடுமையும் அதிகமாயிருந்தது. தான் புறப்பட்ட விடத்துக்குத் திரும்பிப் போவதுஞ் சாத்தியமாயில்லை. நாவரண்டு நெஞ்சுலர்ந்து நடந்து சலித்துக் களைத்து தரையில் விழுந்து விட்டான். இனி என்ன செய்கிறதென்றெண்ணமிட்டுக் கொண்டிருக்கும் மங்கோ, தன்னருகில் பசசென்றிருந்த ஓர் செடியைக்கண்டு அதிசயித்து இந்தப் பாலைவனத்தில் பசுமை நிறம்வாய்ந்த இந்தச் செடியை உண்டாக்கிப் பரிபாலிக்குங் கடவுள் தாம் சிருஷ்டித்த மனித ரூபமாகிய என்னைத்தானா கைவிடுவார்? கட்டாயமாக என்னைக் காப்பாற்றுவர் என்று தைரியத்துடன் ஈசுவரனை ஸ்தோத்திரஞ் செய்து நடந்துபோனான். சிறிதூரம் போவதற்குள் அவ்வழியாய் வந்த வர்த்தகர்கள், அவனைக் கண்டு ஆகாரங்கொடுத்து உபசரித்துத் தங்களுடன் அழைத்துக்கொண்டு போனார்கள். எந்த ஜாதியானாயினும், எந்த மதஸ்தனாயினுங் கடவுள் காபாற்றுவாரென்னும் உண்மையான நம்பிக்கை கொண்டால் சகல ஆபத்துகளினின்றுந் தப்பித்துக்கொள்வான். அவ்வித நம்பிகையில்லையேல் பக்தி யுண்டாகாது. பரமபதமுங் கிடைக்காது.

---

எங்கும் மடமாய் இருக்கிறது, இருக்கத்தான் இடம் இல்லை.

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

### மாங்கல்ய ரக்ஷணம்

ஆதம்ஸன் கம்பெனி 'துபாஷ்" ஸ்ரீமான் சிவசிதம்பர முதலியார், தம் பங்களாவின் முன் பக்கத்தில் "சீக்கு" நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, மார்க்கெட்டு விலை விவரண மடங்கிய பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது பத்னியாகிய ஸ்ரீமதி அறம் வளர்த்த அம்மாள் வெள்ளிக் கோப்பைகளில் முதலியாருக்குக் "காப்பி" கொணர்ந்து வைத்தாள். பத்திரிகையைப் பார்த்துக் கொண்ட வண்ணமாகவே, முதலியார் காப்பியை உறிஞ்சிக் குடித்து விட்டு, "ஸுகமில்லை; இன்றைக்கு டிகாக்ஷன் குறைச்சல்," என்று சொல்லிக் கோப்பையைக் கீழே வைத்தார்.

வாஸ்தவத்தில் முதலியார் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவராக விருந்தார். தம் நினைவு அவருக்கு இருந்திருக்குமானால், அவர் அறம் வளர்த்த அம்மாள் தயார் செய்து கொணர்ந்த காப்பிக்குக் குறை சொல்லியிருக்க மாட்டார். ஏனெனில், மலையாளிகள் சொல்வதுபோல "ஒன்னாம் தரமாகக்" காப்பி தயாரிப்பதில் அறம் வளர்த்த அம்மாளுக்கு இணையாகச் சொல்லக் கூடியவர் ஒருவருமேயில்லை. ஏதாவது வியாபாரத்துக்கு இடைஞ்சலான விஷயங்கள் பத்திரிகையில் ஒருவேளை இருந்தனவோ என்னவோ அறியோம்.

முதலியார் இரண்டொரு நிமிஷம் கழித்துப் பத்திரிகையைப் பிரித்தபடியே கீழே போட்டுவிட்டு, நாற்காலியில் நன்றாகச் சாய்ந்துகொண்டு, கையைநீட்டிச் சோம்பல் முறித்தபடியே, தம் முன்னர் நிற்கும் மனைவியைப் பார்த்து, "அவதல ஏமி?" என்றார்.

முதலியாருக்கு மட்டும் இரண்டொரு வார்த்தை தெலுங்கு பேசத்தெரியும். ஆனால் அவருடைய பத்னிக்குத் தெலுங்கே தெரியாது. என்றாலும், முதலியாருக்குச் சிற்சில வேளைகளில் 'குஷால்' பிறந்தால், அவர் ஏதாவது தெலுங்கிலோ, இங்கிலீஷிலோ, ஹிந்துஸ்தானியிலோ இரண்டொரு வார்த்தை பேசுவாரென்பது, அறம்வளர்த்த அம்மாளுக்குத் தெரியுமானபடியால், அதற்கேற்ப, அவள் பதில் சொல்வாள். இப்போது "அவதல ஏமி?" என்று முதலியார் கேட்டதும், "ஒன்றுமில்லை; இன்றைக்கு நாயிற்றுக்கிழமை தானே. வெளியில் போகவேண்டிய காரியம் ஒன்றுமில்லையே!" என்று அம்மாள் கேட்டாள்.

"ஏன் கேட்கிறாய்?"

"ஒன்று மில்லை. சாயந்தரமாகச் சைதாப்பேட்டைக்குப் போய் வருவதற்கு வண்டி வேண்டும். அதற்குத்தான் கேட்கிறேன்."

"சரிதான்! நீ அடிக்கடி ராமசாமி முதலியார் வீட்டுக்குப் போவது நன்றாயில்லை, அதை இனிமேல் நிறுத்திவிடவேண்டும்" என்று முதலியார் சற்றுச் சினந்தவர் போலச் சொன்னார்.

"என்னுடைய சிற்றப்பன் மகன் வீட்டுக்கு நான் போகக் கூடாதென்று சொல்வதைக் கேட்க எனக்கு வியப்புண்டாகிறது. நம்மைக் காட்டிலும் ஒருவிதத்திலும் குறைந்தவரல்லர். அவருக்கு மாதம் ஐந்நூறு, அறுநூறு வருவதாகச் சொல்கிறார்கள். அவருக்குப் புதிதாகப் பிறந்த குழந்தையைப் பார்த்து விட்டு வர வேண்டாமா? நீங்கள் போகவேண்டாமென்றால், நின்று விடுகிறேன். இருந்தாலும் உங்கள் அபிப்பிராயத்துக்குக் காரணம் எதுவாகவிருக்கலாம் என்று கேட்க விரும்புகிறேன்" என்று அறம்வளர்த்த அம்மாள் சற்று வாடிய முகத்துடன் கேட்டாள்.

"அவருக்கு ஐந்நூறும் வரவில்லை, அறுநூறும் வரவில்லை. கூடிய சீக்கிரத்தில் அவர் மஞ்சள் கடுதாசியுடன் இன்ஸால்வென்ஸி கோர்ட்டுக்குப் போவார்; இல்லாவிட்டால் தற்கொலை புரிந்துகொள்வார். அதனால்தான் நீ அவர் வீட்டுக்குப் போகக் கூடாதென்கிறேன்."

"இந்தச் சமாசாரத்தைக் கேட்க எனக்கு மிக்க வருத்தமாக விருக்கிறது. என்றாலும் இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? அன்னியர் வார்த்தையைக் கேட்டு இந்த அபிப்பிராயங்கொண்டிருக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்."

"அன்னியர் ஒருவரிடமுமிருந்து நான் இதைக் கேட்கவில்லை. அவரேதான் என்னிடம் வந்து, முந்தாநாள் இரண்டாயிரம் ரூபாய் கைபதிலாகக்கேட்டார். என்னிடம் அப்போது பணமில்லா திருந்தபடியால் உடனே கொடுக்க முடியவில்லை. நீ சொல்லுகிறபடி

ஊசி கொள்ளப்போய்த் துலாம் கணக்குப் பார்க்கிறதா?

மாதம் ஐந்நூறு அறுநூறு சம்பாதிக்கிறவர்களுக்குப் பாங்கில் மூலதனம் இல்லாமலிருக்குமா? நீயே யோசித்துப் பார்."

"அது அவருடைய துரதிருஷ்டந்தான். பாங்கில் இருந்த பணத்துக்கு மேலாகவும் வேண்டியிருந்ததனால் உங்களைக் கேட்டிருக்கக்கூடாதா? இதனால் அவரை அவ்வாறு ஏளனமாக மதிப்பிடலாமா?"

"நீ எல்லாம் தெரிந்தவள் போலப் பேசுகிறாயே; சங்கதி யென்ன?"

"ஒன்றுமில்லை. நீங்கள் பணம் இல்லை யென்று சொன்னதைக் கேட்டு, வாடிய முகத்துடன் அவர் இங்கு வந்து சமாசாரங்களைச் சொன்னார். அப்போதுதான் என் தம்பி எனக்குக் கொடுக்கவேண்டிய இரண்டாயிரம் ரூபாயைக் கொண்டு வந்தான். அதை அப்படியே அவரிடம் கொடுத்துவிட்டேன்."

"கொடுத்துவிட்டாயா? கொடுத்துவிட்டாயா?" என்று முதலியார் சற்று அவசரத்துடனும் ஆத்திரத்துடனும் கேட்டார்.

"ஆமாம், கொடுத்துவிட்டேன். இரண்டு மாதத்துக்குள் கொடுப்பதாகச் சொல்லிப் போயிருக்கிறார்."

"ஹூம்! பெண்புத்தி பின்புத்தி. அது உன்னுடைய பணந்தான். அதை நீ என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அப்படித்தான் உன் தகப்பனார் உயில் எழுதிவைத்திருக்கிறார். என்றாலும், என்னை ஒரு வார்த்தை நீ கேட்டிருக்கலாம். போகட்டும். என்ன ஆதாரத்தின்மேல் கொடுத்தாய்?"

"ஒரு ஆதாரமுமில்லை. அவர் வார்த்தையை நம்பித்தான் கொடுத்தேன்."

"பேஷ்! பணம் திரும்பி வந்தாற்போலத்தான்! ஹூம்! நடுச் சமுத்திரத்தில் போட்ட பொருள்."

"என்னவோ அவர் என்னை மோசம் பண்ணமாட்டார் என்ற நம்பிக்கை எனக்குப் பூர்ணமாக விருக்கிறது. நீங்கள்தான் அதைரியப்படுகிறீர்கள்."

"சரி! எல்லாம் பின்னால் தானே தெரியும்."

* * *

அடுத்த ஜனவரி மாதத்தில் வெளியான கௌரவப் பட்டங்களில் நமது சிவசிதம்பர முதலியாருக்கு "ராவ் ஸாஹிப்" என்ற பட்டம் கிடைத்தது. கம்பெனியின் முதல் பங்காளியான ஸர். டி. ஆதம்ஸன் இதற்கு வெகுவாகச் சிபார்சுசெய்ததாகக் கேள்வி. முதலியாருக்கு இப்படிக் கௌரவம் வந்தாலும், அதற்கேற்ற பொருள் வரும்படி குறைந்தது. ஆதம்ஸன் கம்பெனிக்குக் கடன்கள் அதிகரித்தன. வியாபாரம், அவ்வளவு மும்முரமாக நடக்கவில்லை. அதனால் முதலியாருக்கு ஏற்பட்ட கமிஷன் தொகை வரவர மட்டுப்பட்டது. இவ்விஷயமெல்லாம் கம்பெனியில் முக்கியமான சில உத்தியோகஸ்தர்களுக்குமட்டுந்தான் தெரிந்திருந்தது. ஆதம்ஸன் ஏதோ காரணத்தால் சீமைக்குப் போய்விட்டார். முதலியார் ஆபீசுக்குப் போவதும் அருமையாயிற்று. இதனிடையில் முதலியாருக்குப் பாங்கில் இருந்த பணமெல்லாம் போய்விட்டது. ஆர்பத்னட் கம்பெனி, இவரை மட்டுமா, இந்த ராஜதானியில் பல்லாயிரம் பேரையு மல்லவா சீர்குலைத்து ஓட்டாண்டியாக்கிவிட்டது? காலக்ஷேபம் செய்வதற்காக, முதலியார் வட்டக்கடை சுப்பையன் செட்டியாரிடம் தவணை வட்டிக்காக ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார். அவருடைய கை நொடித்ததைக் கேட்ட செட்டியார் உடனே கோர்ட்டில் "பிரியாது" செய்து தீர்ப்புப் பெற்றுவிட்டார். டிக்ரியை நிறைவேற்றுவதற்கு, முதலியாரை வாரண்டில் பிடிக்கப்போவதாயும் ஒரு வதந்தியுலாவிற்று. அப்போது முதலியாருடைய மன நிலைமையை நாம் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. தன்னுடைய மனைவியின் பணம் இருந்தால் இந்த ஆபத்துக்குத் தப்பிக் கொள்ளலாமே யென்று நினைத்து, அவளிடம் அவ்வாறு இருமுறை வெளியிட்டதுமுண்டு. ஆனால் அவர், விஷயம் முழுவதையும் தம் மனைவியிடம் சொல்லவில்லை யாதலால், அவளுக்கு முதலியாருடைய துர்த்தசை தெரியக் காரணமில்லா திருந்தது.

ஒரு நாள் காலையில் பத்து மணிக்கு, முதலியார் தமது பங்களாவில் தாம் வழக்கமாக உட்கார்ந்து எழுதும் அறைக்கதவைச் சார்த்திவிட்டு, சுமார் ஒரு மணி நேரம் ஏதோ எழுதினார். எழுதியதை ஒரு லகோடாவில் அடக்கம் செய்து முத்திரைபோட்டு, மேஜைச் சொருகுபெட்டியில் வைத்துப் பூட்டினார். பிறகு ஒருவரும் அறைக்குள் இல்லை யென்

பதைத் தெரிந்துகொண்டு, தமது கைத்துப்பாக்கியை யெடுத்து, ரவை போடப்பட்டுச் சரியாக விருக்கிறதா என்று பார்த்து, தன் மார்புக்கு நேரே குறிவைத்துச் சுட்டுக் கொள்ளக் கையை நீட்டினார். அதே நிமிஷத்தில், "உள்ளே வரலாமா?" என்ற குரல் கதவண்டை கேட்டது. முதலியார் துப்பாக்கியைக் கடிதங்களின் கீழே மறைத்துவிட்டு, "வாருங்கள்' என்றார்.

ராமஸாமி முதலியார் உள்ளே வந்தார். சிவசிதம்பர முதலியாரின் மார்பு படபடவென்றடித்துக்கொண்டிருந்தது. அவருடைய முகம் ஒருவித விகாரத்தையடைந்திருந்தது. இவைகளை யெல்லாம் கவனித்த ராமஸாமி முதலியார், "என்ன சமாசாரம்? ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறீர்களே!" என்று கேட்டார்.

"மாதிரி என்ன? உம்மிடம் சொல்லக்கூடாதது ஒன்றுமில்லை, நாட்டுக்கோட்டையான் வாரண்டு பிறப்பித்திருக்கிறான். அதைத் தீர்க்கப் பணம் இல்லை. இனிமேல் கடன்காரர்கள் ஒவ்வொருவராய்க் கிளம்புவார்கள். என் கதி இப்படியாயிற்று' என்று சிவசிதம்பர முதலியார் சொல்லிவிட்டு, குழந்தை போல அழுதார்.

"முதலியாரே! அதைரியப் படவேண்டாம். உமது சங்கதிகள், எல்லாம் எனக்குத் தெரியும். நாட்டுக்கோட்டையான் டிக்ரியை நான் மேடோவர்வாங்கிக்கொண்டிருக்கிறேன். அது தீர்ந்துவிட்டதாக எழுதித் தருகிறேன். இப்போது ஐயாயிரம் ரூபாவுக்கு ஒரு உண்டியல் தருகிறேன். நெருக்கடியான கடன்களை யடைத்துவிடும். பிற்பாடு பார்த்துக் கொள்வோம்."

"உம்முடைய பெருந்தன்மையும் பக்ஷமும் அளவுகடந்தனவாக இருக்கின்றன. இந்தத் தொகைக்கு ஈடாகக் கொடுக்கக்கூடிய பொருள் என்னிடம் ஒன்றுமில்லையே!"

"ஒன்றும் வேண்டாம். உம்முடைய நட்பு மட்டும் இருந்தால் போதுமானது. எனக்கு இப்போது சாவகாசமில்லை. சாயங்காலம் வருகிறேன்" என்று சொல்லி, முன்கூறியபடி டிக்ரி தீர்ந்து போனதாக எழுதி, ஐயாயிரம் ரூபாவுக்கு ஒரு உண்டியலையும் கொடுத்துவிட்டுப் போய்விட்டார் ராமஸாமி முதலியார்.

வெளியில் போகும்போது, "நல்ல சமயத்தில் போனேன். இன்னும் ஒருக்ஷணம் தாமதித்திருப்பேனாகில் சௌபாக்கியவதி அறம் வளர்த்த அம்மாளின் நிலைமை வெகுபரிதாபகரமாய்ப் போயிருக்கும்" என்று நினைத்துக் கொண்டு ராமஸாமி முதலியார் சந்தோஷப்பட்டார். எழுந்திருந்து வரும்போது, சிவசிதம்பர முதலியாரின் மேஜையில் கடிதா[illegible]க்குக் கீழேயிருந்த துப்பாக்கியை அவர் பார்த்துவிட்டார். ஆதலால், அவருடைய தற்கொலையைத் தவிர்க்கும்படி தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்துக்கு ஈசுவரனை மனமாற ஸ்துதித்து வீட்டுக்குப் போனார். பராவரியாய், சிவசிதம்பர முதலியாருடைய துர்த்தசையைக் கேட்டது முதல், ராமஸாமி முதலியாரின் மனம் துடித்தது. தன்னாலான உபகாரத்தைச் செய்யவேண்டுமென்று நினைத்தே அவர் அப்போது சிவசிதம்பர முதலியாருடைய வீட்டுக்கு வந்தார். தனக்கு நல்ல சமயத்தில் பண உதவிபுரிந்த அறம் வளர்த்தம்மாளுக்கு, அவளுக்குத் தெரியாமலேயே, பிரதியுபகாரம் செய்ய நேர்ந்ததற்குப் பெரிதும் சந்தோஷ சித்தரானார்.

* * *

மற்றும்நாட் காலையில் ராமஸாமி முதலியார், அறம்வளர்த்த அம்மாளுக்கு மூவாயிரம் ரூபா அனுப்பினார். அதை அவள் எடுத்துக்கொண்டுபோய், தனது கணவரிடம் காட்டி, "பார்த்தீர்களா! சமுத்திரத்தில் போட்ட பணம் வட்டியுடன் திரும்பி வந்துவிட்டது" என்று வேடிக்கையாகச் சொன்னாள்.

"ராமஸாமி முதலியார் விஷயமாக நான் நன்றாய்த் தீர விசாரியாமல் சொன்னதைச் சுட்டிக் காட்டி என்னை நீ பரிகாசம் செய்கிறாய் என்பதைத் தெரிந்து கொண்டேன். உனக்கு அவர் பணத்தைத் திருப்பிக் கொடுத்ததில் அதிசயம் ஒன்றுமில்லை. வாங்கின பணத்தைத் திரும்பக் கொடுப்பது நியாயந்தான். ஆனால் பணத்தினால் பெறமுடியாத தான பொருளை உனக்கு அவர் கொடுத்திருக்கிறாரே, தெரியுமா?"

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே. இன்னும் அவர்மீது உங்களுக்கு ஏதாவது கோபமோ த்வேஷமோ இருக்கிறது போலத் தோன்றுகிறதே."

ஊசியை ஊசிக்காந்தம் இழுக்கும், உத்தமனைச் சிநேகம் இழுக்கும்,

"ஆ! ஆ! அப்படிச் சொல்லாதே. நான் பணம் கொடுக்க மறுத்ததை அவர் நினைக்காமல் நல்ல சமயத்தில் எனக்கு அவர் செய்த நன்றியையும், அதன்மூலமாக உனக்குச்செய்த மகோபகாரத்தையும் அறிந்து நாம் அத்தியந்த சந்தோஷமடைந்து அவரைக் குல செ[illegible]மாகக் கொண்டாடவேண்டும்."

தாங்கள் இன்னும் என்னோடு வேடிக்கையாகப் பேசுகிறீர்கள் போலத்தான் தோன்றுகிறது. வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுத்ததில் விசேஷம் ஒன்றுமில்லையென்று சொல்லிவிட்டீர்கள். இன்ஸால்வென்ஸி கோர்ட்டுக்குப் போகக்கூடியவரால் உங்களுக்கு என்ன உபகாரம் செய்திருக்கமுடியும்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை."

"ஸ்பஷ்டமாகச் சொல்லவேண்டுமா? உனது கழுத்தில் உள்ள மாங்கல்யம் இப்போது அங்கேயே இன்னும் நிலைத்திருப்பதற்குக் காரணம் ராமஸாமி முதலியாருடைய கிருபைதான். அதிகம் சொல்ல நா எழவில்லை. எனது மேஜைச் செருகு பெட்டியில் உள்ள முத்திரை போட்ட பைக்குள்ளிருக்கும் கடிதம், இவ்விஷயத்தை உனக்கு இன்னும் நன்றாக விவரிக்கும். போய் எடுத்துப் படி."

---

# வஸந்த மந்திரம்

(190-ம் பக்கத் தொடர்ச்சி.)

## பதினோராம் அதிகாரம்

## சிப்பாயின் பிரதாபம்

அனந்தபட்டர் உள்ளே நுழைந்ததுதான் தாமதம்; சிப்பாய் மல்லிக் மகமத் அவிழ்த்து விட்டான் தன் மூட்டையை. கவுஸ் மற்ற குதிரை வீரர்களுடன் அரண்மனைக்குப் பின்புறமாய் இருக்கும் லாயத்துக்குச் சென்றுவிட்டான். வாயிலில் காவல் காத்து நிற்கும் ஏமாங்கதனைச் சும்மா விட்டுவிட இஷ்டப்படவில்லை, மல்லிக் மகமத். ஆகையால் தன்னிடமிருந்து எழுந்துவந்து "ஏடா பயலே! உங்களுக்கெல்லாம் வெகு திமிரு பிடிச்சு இருக்குதா; யாருனு தெரியாது கண்டபடி பேசறே! முழியேப் பிடிங்கிடுவே! தெரியுமா? சாமியார் வந்தா உள்ளே விடுறதா, கண்டபடி பேச்சுப் பேசறதா? பத்ரம்; உஷார்" என்றான் தன் பாஷையில்.

ஏமாங்கதன் கொஞ்சம் அர்த்தம் பண்ணிக்கொண்டு "என்ன சிப்பாய், என்ன செய்துட்டேன்: இப்போ என்ன ஐயா முழுகிப் போச்சு? யாராவது வந்தால் எஜமாங்களைக் கேட்டுத்தானே விடவேணும்? இதில் என்ன தப்பு?—"

"அடே! உங்கள் மதத்தை அடக்கக் காலம் வந்துடிச்சு. கல்யாணம் மட்டும் ஆகட்டும்; உங்களைக் கருவறுக்கிறேன்; பகதூர்" என்று மல்லிக் மீசையை முறுக்கினான்.

ஏதோ கல்யாணம் நடக்கப் போகிறதென்றும், அதன்பொருட்டு அனந்தபட்டர் வருகிறாரென்றும், தன்னையும் மற்ற பரிவாரங்களையும் சுல்தான் அவருக்குத் துணையாக அனுப்பியிருக்கிறாரென்றும் ஜாடையாய் சிப்பாய்க்குத் தெரியும்; அம்மட்டே ஒழிய வேறில்லை. ஆனால் யாருக்குக் கல்யாணம், யார் பெண்ணைக் கொடுக்கப் போகிறார்கள், என்பது ஒன்றும் விசேஷமாய் அவனுக்குத் தெரியாது. ஆனாலும் சண்டைக்கு ஏதாவது காரணம் வேண்டுமல்லவா? எதையோ பிதற்றிக் கொண்டு வந்துவிட்டான் ஏமாங்கதனிடம். வெறும் வாய் மெல்லுகின்றவனுக்கு அவல் கிடைத்துவிட்டால் விடுவானா?

ஏமாங்கதன், "ஏ சிப்பாய்! குடிவெறியா என்ன? கல்யாணமாவது ஒன்றாவது! உனக்கும் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்? என்னவே உளறுகிறாய்! போய் இரு அப்படி, பூந்தோட்டத்துக்குள்! உங்கள் எஜமான் சொல்லிப் போனபடி அப்படி எட்டிப்போய் உட்காரு" என்றான்.

சிப்பாய் "நீ ஏடா, என்னைச் சொல்வது? உன் தலைமேலையா நிற்கிறேன். உங்க ராஜா வாசல்லேகூட நிற்கக் கூடாதா? என்னவோ மஹா அதிகாரம் பேசுகிறாயே! போகிறதில்லை நான். என்ன பண்ணுவே! யார்தான் என்ன செய்யராளோ பார்க்கலாம் ஒரு கை—" என்று வாதித்தான்.

ஏமாங்கதன் இது என்ன சனியாய் இருக்கிறது, என்று மனதில் நினைத்து "அப்பா சிப்பாய் கோபியாதே. சும்மா நிற்பவனை ஏன்

சண்டைக்கு இழுக்கிறாய்! போயேன் அப்புறம்! சத்தம் போட்டால் உள்ளே இருக்கிறவர்கள் கோபிப்பார்கள். இதைக் கொஞ்சம் கவனிக்கணும் அப்பா—"என்றான்.

சிப்பாய் "பாட்டு! என்ன பாட்டு! நான் கேட்டு இருக்கிறேன் போடா. பாட்டெல்லாம் தெரியுது பார் இன்னும் கொஞ்ச நாளையிலே! 'துலுக்கப் பெசாசு' என்னு கேட்டிருக்கையல்ல! அடுத்த சண்டையிலே சொல்றேன் பார். உம்மண்டயெ மொதல்லே உடைக்கிறேன்—"

ஏமாங்கதன் "இது என்ன விந்தை! இந்தச் சதைக்குவியல் என்னவோ பிதற்றுகின்றது. கல்யாணமாம்! இல்லாவிட்டால் சண்டையாம்! என்னடா இது, விபரீதம்!—ஈசா நம் தேசத்தையும், அரசனையும், காப்பாற்றுவாயாக!" என்று மனதில் எண்ணிப் பெருமூச்சு விட்டான்.

ஏமாங்கதன் சற்றுப் பேசாமல் நிற்கவே அவன் தன்னிடம் பயந்துவிட்டான் என்று சிப்பாய் எண்ணிக்கொண்டு "அடே பொம்பளே! என்னடா தலை குனிந்துகிட்டு நடுங்குறே—வரட்டும் வரட்டும்! சொல்றேன். இதைப் பார்க்கப் பத்துப்பங்கு நடுங்கணும் கத்தியெடுத்துத்தலைசீவும்போது!—"என்னுமுன் ஏமாங்கதனுக்குக் கோபம் மூண்டது. "அடே நான் சொல்லச் சொல்ல மரியாதையாய் அப்பால் போகாமல் மறுபடி மறுபடி பேசறையா! தள்ளுவேன் கழுத்தைப் பிச்சுடி. தெரியுமா என் சங்கதி! கத்தாதே கத்தாதே என்றால் உளறல் பலமாகின்றது!" என்றான்.

சிப்பாய் "என்னடா! பிச்சைக்காரப் பயலே! தாறுமாறாய்ப் பேசறாய்! தள்ளிடுவாயா, ஓடிச்சுடுவேனடா ஒன்கையை!" என்று சரசரவென்று பக்கத்தில் நெருங்கினான்.

புல்லறிவாளர்க்குச் சண்டை செய்யக் காரணமா அகப்படாது? சாதாரணமாய்ப் பொறுமையுடையவன் என்றே சொல்லவேண்டிய ஏமாங்கதனுக்கும் இவ்வற்பனுடைய வார்த்தை கர்ணகடூரமாய இருந்தது. ஆகையால் மேல் நெருங்கும் சிப்பாயைப் பார்த்து ஏமாங்கதன் "நில் ஐயா நில்! வீண் சண்டைக்கு வந்தால், பின் விசனப்பட வேண்டியிருக்கும்! இனி வந்தால் கால்கைகளைக் கட்டிப் போட்டிடுவேன்" என்றான்.

சிப்பாய் "உனக்கு அவ்வளவு பலமா?" என்று சொல்லிக்கொண்டே ஏமாங்கதன் கன்னத்தில் ஒரு அறை கொடுத்தான். ஏமாங்கதன் தன் கைத்தடியை எடுத்து அவன் தோளைப் பார்த்து ஒரு அடி அடித்தான். அவ்வடி எங்கே உரைக்கப் போகின்றது. அச்சதை மலைக்கு! இருவரும் கை கலந்துவிட்டனர். எப்படியிருப்பினும் சிப்பாய் மிகவும் பலவான். தேகம் சற்றுப் பருத்திருந்தபடியால் இலாகவம் மிகக் குறைவாய் இருந்தது. ஏமாங்கதனுக்கோ அப்படியில்லை. தேக லாகவம் அதிகம்; பலம் சற்றுக் குறைவுதான். ஆகையால் முதலில் சிப்பாயைக் கட்டிக் கீழே தள்ளி அவன் கைகால்களை ஆட்ட முடியாமல் செய்து விட்டபோதிலும், அவ்வம்பனை ஒரு தீங்கும் செய்யக் கூடாதபடி கைகளைக் கட்டிவிடலாமென்ற எண்ணத்துடன், ஒரு கையால் அவனை அழுத்திக்கொண்டு, மற்றொரு கையால் தான் இடுப்பில் கட்டிக்கொண்டிருந்த தோல்பட்டையை அவிழ்க்கப்போனான். அதுதான் நல்ல சமயம் என்று சிப்பாய் திமிறிக்கொண்டு எழுந்து ஏமாங்கதனைக் கீழேதள்ளி அவன்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு தன் இடுப்பில் செருகியிருந்த சிறு கத்தியால் ஏமாங்கதனை மார்பில் குத்தினான்.

நல்ல வேளை! கத்தி இன்னும் மார்பில் பாயவில்லை; துணிகளைத் துளைத்துக்கொண்டு போய்ச் சற்றே காயம் செய்துவிட்டது! அதற்குள் சிப்பாயின் கை அசையமுடியாமல் நின்றுவிட்டது! மண்டப வாயிலிலிருந்து ஓடிவருகிறான் சித்திரக்கிரீவன்! சிப்பாய் அடக்க முடியாத கோபத்தோடு தன் கை தடைபட்டதற்குக் காரணம் என்னவென்று திரும்பிப் பார்க்கவே, கவுஸ் தன் கையைக் கெட்டியாய்ப் பிடித்திருக்கக் கண்டான்.

சிப்பாய் "கவுஸ்! நான் என்ன செய்கிறேன் என்பதைப் பார்க்காமல் என் கையைப் பிடித்துக்கொண்டு தொந்தரவு செய்கின்றாய்! விடு! இந்தப் பயலை ஒரே குத்தாய்க் குத்திக் கொலகிறேன்" என்று சொல்லியும், கவுஸ் இன்னும் பலமாகக் கையைப் பிடித்துக்கொ சிப்பாய் "அடே செவுடா விடு கையை கத்துவதற்குள், விஷயம் இன்

ஊணுக்கு முந்தவேண்டும் கோளுக்குப் பிந்தவேண்டும்.

அறிந்துகொண்ட சித்திரக்கிரீவன், சிப்பாயின் தோளைப் பற்றி ஒரே தூக்காய்த் தூக்கி அப்பால் எறிந்தான்; கவுஸும் அவ்வாறு செய்வதற்கு மனப்பூர்த்தியாய் உதவிசெய்தான். இருவரும் சிப்பாயைத் தூக்கி எறிந்த பின்னர், ஏமாங்கதனைக் கைகொடுத்து எழுப்பினார்கள்.

சித்திரக்கிரீவன் "தம்பி இது என்ன விந்தை! ஒரு நொடியில் நான் வருவதற்குள் என்ன வேலை செய்துட்டே! இவனை சரிபண்ணியா நீ சண்டை போட்டது?"—என்றதும், சிப்பாயைப்பார்த்து "என்ன ஐயா வந்தஇடத்திலே வாலைச் சுருட்டிக்கிண்டு சும்மா இருக்கமாட்டாமல் கத்தி யெடுத்துக்கொண்டானாம் குத்தினானாம்! இது என்ன கண்மூடிக் கபோதி ராஜ்ஜியம் என்னு எண்ணினையா?" என்றான்.

சிப்பாய் மல்லீக் "அடடே இந்தப் பயலும் வந்தானா! இரண்டு பேரும் வாங்கோ! ஒருகை அச்சா! ஒரு கை இரண்டு பேரும்! ஓ குத்! வா இரண்டுபேர்!—" என்று மீசையை முறுக்கிக்கொண்டு மறுபடி சித்திரக்கிரீவன் மேல் சென்றான். இதற்குள் கவுஸ் மல்லீக் மகமத் சிப்பாயைப் பிடித்து இழுத்துத் தங்கள் சொந்த பாஷையில் சில வார்த்தைகள் பேச, சிப்பாய் அவனை நோக்கி "இது என்ன அநியாயம், நீயும் இந்தக் கழுதைகளோடு சேர்ந்துகிண்டு அவர் பக்கம் பேசராய்" என்று பதறினான். அவனைப் போகவிடாமல் கையைப்பிடித்துக்கொண்டு ஏமாங்கதன் சித்திரக்கிரீவன் இருவருக்கும் ஜாடை காட்டி அப்புறம் போகச் சொல்வதற்குள் சபை கலைந்து எல்லோரும் வெளியே வந்துவிட்டனர்.

அரை நொடியில் வீரேசனும் அனந்தபட்டரும் வெளியே வரவே, ஏமாங்கதன் நிற்கும் நிலையும், அவன்மேல் படிந்துள்ள மண்ணும், மேல்துணியில் இரத்தமும், தலை விரிந்திருக்கும் கோலமும், இடுப்புப் பட்டை அவிழ்ந்து கீழே கிடப்பதும், சித்திரக்கிரீவன் அவனைத் தன் கைகளில் தாங்கிக் கொண்டிருப்பதும், எதிரே படு மூர்க்கமாய், வேட்டை நாய் மான்மேல் பாயப் போவதுபோல, சிப்பாய் சீறுவதும், கையில் பிடித்துள்ள சிறு கத்[...] கவுஸ் அவனை அழைதது்ச் செல்லப் [...]னப் படுவதும்,—விஷயம் இன்ன[...]ன்கு விளக்கின. மொத்தத்தில் அனந்தபட்டர் நன்றாய்த் தெரிந்துகொண்டார் என்பதில் சந்தேகமில்லை.

அனந்தபட்டர் வீரேசனைப் பார்த்து "ஐயா எனது க்ரஹசாரம் இந்தப் பெரும்புலியைக் கூட அழைத்து வந்தேன். இவனுடன் போராட என்றால் ஆவதேயில்லை. இன்று காலை முதல், இது பத்தாவதோ பன்னிரண்டாவதோ நடக்கும் சண்டை: போன பக்கமெல்லாம் சண்டை, சண்டைதான் வேறொன்றுமில்லை" என்றதும் சிப்பாயைப்பார்த்து "அரே! சிப்பாய்! நீ அமைதியாய் இருக்கமாட்டாய் போலும். உடனே உனக்காக ஊரைவிட்டு ஓடிவிடலாம் போலிருக்கின்றது! இனி உன்னுடன் காலந்தள்ள என்றால் முடியாது! ஒரு நாழிகையாவது சும்மா இருக்கமாட்டாய்போல் இருக்கின்றதே!" என்றார்.

சிப்பாய் அடிபட்ட நாய் தன் வாலைப் பின்னங்கால்களுக்கு இடையில் நுழைத்துக் கொள்வது போல் கத்தியை மறைவாய்ச் செருகிக்கொண்டு "பின்னை என்ன மஹராஜ்! தாறுமாறாய்ப் பேசித் திட்டறான் ஹசரத்! அந்தத் திருட்டுப்பயல்—" என்றான்.

அனந்தபட்டர் "நியாயம்! நியாயம்! நீ வெகு யோக்கியன்; அவன் தான் திருட்டுப் பயல்! நியாயம் அப்பா! சரி சரி! போ பேசாமல். போவென்றால் உடனே நகர் இருந்த இடத்தை விட்டு—" என்று கடிந்து சொல்ல, சிப்பாய் அப்பால் போய்க் கொண்டே "எஜமான் வந்தாங்களோ பிழைத்தாங்களோ! இல்லாட்டா இரண்டுபேரையும் பொளந்து இருப்பேன். என்ன கவுஸ்! நீ என்ன சொல்லறே!" என்றான்.

கவுஸ் ஒன்றும் சொல்லவில்லை. 'உன்னைப் போன்ற முட்டாள்களுடன் வந்தால் வருகிறவனுக்கு சீக்கிரம் காரியம் சித்தியாகும்!' என்று மனதில் எண்ணிக்கொண்டான். இருவரும் லாயம் இருக்கும் இடத்தை நோக்கிச் செலலவே, வீரேசன் தன்ஜனங்களையும் ஹத்தும்றிச் சண்டைசெய்ததற்குக் கோபித்து, அவர்களை இனிமேல் உஷாராய் இருக்கும்படி சொல்லிவிட்டு அனந்தபட்டரை அவருடைய விடுதிக்கு அழைத்துச் சென்றான்.

வழி முழுவதும் சிப்பாய் கோபம் தணியாமல சரமாரியாய்த்திட்டிக்கொண்டே வந்தான். கவுஸ்மட்டும் பேசவில்லை. கடைசியாய் மல்

ஊதுகிற சங்கு ஊதினால் விடிகிறபோது விடிகிறது.

லீக் "ஏ கவுஸ்! நான் ஓரே அடியாய் அவனைக் கொல்லவில்லையே என்று வருந்துகிறேன். நாளைக்காகட்டும்; எப்படியாவது ஒருகைபார்க்கிறேன். அந்தப் பெரியவன் இருக்கானே—" என்றான்.

கவுஸ் "சரி சரி ஹசரத்! எல்லாம் உன் மனதில் வைத்துக்கொள். நீ எந்த இடத்தில் இருக்கிறாய் என்பதை மறந்து விடுகிறாய் போலிருக்கிறது. இது உதய புரியாக்கும்; பத்ராம். நாலு சேவகர்கள் சேர்ந்தால் நம்மிருவரையும் சிறையில் போட்டு விடுவார்கள். ஏதோ விட்டார்களே என்று சந்தோஷப்படு; நட விரைவாய்" — எனச் சிப்பாய் சற்றே திகைத்தான். சிறைச்சாலை என்ற பிறகுதான் சிப்பாய்க்கு உறைத்தது. சிறைச்சாலையில் போட்டுவிட்டால் தன் இஷ்டப்படி சென்று கண்டவர்களுடன் எல்லாம் சண்டை போட வழியில்லாமல் போகுமே என்று வருந்தினான்.

## பன்னிரண்டாம் அதிகாரம்

## கனவு

பாட்டுக் கச்சேரியிலிருந்து எழுந்து போன லலிதாதேவி நேரே தன் அறைக்குப்போய் நடுவறையில் தொங்கும் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடவாரம்பித்தாள். அதுவும் அவள் மனதிற்குப் பிடிக்கவில்லை. அவள் மனம் ஜயபால மஹாராஜாவிடம் ஈடுபட்டு, அவனைத்தவிர வேறு ஒரு விஷயத்தையும் உட்கொள்ள இஷ்டப்படவில்லை. இப்பொழுது யாராவது ஜயபாலனுடைய வீரச்செயல்களை ஒவ்வொன்றாய் வர்ணிக்க ஏற்றுக்கொண்டால் நம் லலிதை இரவுமுழுவதும் கேட்டுக்கொண்டிருக்கப் பின்வாங்கமாட்டாள். அங்ஙனம் யார் செய்யப் போகின்றனர்?

"என் அருமைநாதனை என்று காண்பேன்! என்று காண்பேன்!" என அவள் மனம் ஏங்கிற்று. சபாமண்டபத்தில் பாடும் பாட்டுக்களோ இவ்வெண்ணத்தை மறக்கச்செய்வதற்குப் பதிலாய்ப் பதின்மடங்கு அதிகமாய் ஞாபகத்துக்குக் கொண்டுவந்தன. ஆகையால் அங்கிருக்க இஷ்டப்படாமல் தன் அறையில் தனியாய் வந்து ஊஞ்சல் ஆடவே, அவள் மனவருத்தம் முன்னிலும் நூறு பங்கு அதிகமாயிற்று. சுற்றிலும் கட்டித்தொங்கும் படங்களையெல்லாம் பார்த்தாள்; எல்லாம் வருந்துகின்றன போலவே தோன்றின; ஓர் மூலையில் சகுந்தலை தன் நாயகனுக்கு நிருபம் எழுதும் படம் மாட்டியிருந்தது. அப்படமே இன்று லலிதைக்கு மிக நேர்த்தியானதுபோல் தோன்றிற்று. 'சகுந்தலையும் என்போல் கவலைப்பட்டாளோ! அவளுக்கும் எனக்கும் வித்தியாசம் உண்டு; அவள் தன் நாதனை ஒரு முறையாவது பார்த்தவள்; யான் பாராத பாவி. இனி, சகுந்தலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில் என்ன பயன்!' என்று மனம் புழுங்கித் தன் தகப்பனாருடைய அறையில் புகுந்தாள்.

லலிதையின் அறைக்கு அடுத்தாற்போல் இருப்பது அரசனுடைய அறை. செல்வக் குழந்தையாகையால் லலிதை எங்கே வேண்டுமானாலும் போவாள். தாயாராவது தகப்பனாராவது தடைசொல்லவே மாட்டார்கள். தகப்பனாருடைய அறையில் மேற்குப் பக்கத்து ஜன்னலின் வழியாய்க் கொஞ்சம் குளிர்ந்த காற்று அடிக்கின்றது; நடுவறையில் ஒரு சிறிய விளக்கு ஏற்றிவைத்து இருக்கிறார்கள். மற்ற விளக்குகளை இன்னும் ஏற்றவில்லை. நேரே ஜன்னலுக்குச் சென்று, குளிர்ந்த காற்று முகமேல் அடிக்க, ஜன்னலில் சாய்ந்து கொண்டு வெளியே பார்த்தாள். இருள் மூண்டதுபற்றித் தோட்டமெல்லாம் ஒளியற்று இருந்தன. பனை உயரத்துக்குமேல் சுக்ரன் பிரகாசிக்கின்றான். தூரத்தில் கோட்டை விளக்குகள் 'மினுக்கு மினுக்கு' என்று காண்கின்றன. வானமெல்லாம் நக்ஷத்திரம் பூத்து இருக்கின்றது. மரங்களின் பாகங்கள் செவ்வையாய்த் தெரியாவிடினும் இலைகள் சற்றே அசைந்து ஆடுவதால் உண்டான மென்மைக்குரல் தூரத்திலிருந்து வரும் கடலோசை போன்றிருந்தது. வெகுதூரத்துக் கப்பால் உள்ள மலைகளும் வானமும் வித்தியாசமில்லாமல் ஓரே கறுப்பாய்த் தோன்றின.

"இம்மலைகளைத்தாண்டித்தான் என் நாதன் வரவேண்டுமோ? இவை ஆகாயம் வரையில் எட்டி இருப்பனபோலவும், கடந்து செல்ல வழியே இராதுபோலவும் காண்கின்றனவே!- இக்கஷ்டமான வழிகளைக் கடந்துதானோ அற்ப ஸ்திரீயாகிய என்னை இலக்ஷியம்பண்ணி என் நாதன் வருவார்" என்று அவள் ஏங்குவாள். மறுபடியும் "இதுஎன்ன என்மனம்இப்படிச் சலிக்கின்றது! ஒரு நாளும் இப்படி யான்

வருந்தியதில்லை. ஒரு நாளும் இல்லாத பரபரப்பும், மனத்தளர்வும் ஒருங்கே உண்டாகவேண்டுவது என்ன காரணம்பற்றி?" என்பாள். மறுபடி அவள் மனம் எங்கேயோ போகும். இப்படிப்பலவாறாய் நிலைதப்பி மயங்குகிறாள் லலிதா தேவி. தன் மனப்போக்கு, தன் தங்கை தாய்க்குக்கூடத் தெரியக்கூடாதென்று பிரயாசைப்படுகிறாள். "அவர்களுக்கு என் நிலைமை தெரியாமலிருப்பது கஷ்டம். நான் பைத்தியக்காரிபோல் மேலும்கீழும் திரியும்போது கட்டாயம் என் மனவருத்தத்தை அவர்கள் கண்டுகொள்வார்கள்" என்று வெட்கப்படுவாள் சில வேளைகளில்.

"ஏ, லலிதா, நீ வருத்தப்பட வேண்டாம் மற்றவர்கள் உன்னைக் குறை சொல்வார்கள் என்று. உன்னைப்போல் எத்தனையோ பேர் சமயம்வந்த காலத்தில் வருந்தியிருக்கின்றனர். இன்னும் வருந்துகின்றனர். இனி வருந்தவும் போகின்றனர்! அவ்வித வேதனைப் படாதவர்களும் காதலென்பதே இத்தன்மைத்தென்று அறியாதவர்களும் என்ன வேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளட்டும். நீ வருந்துவது இயல்புதான்!" என்று மனது தேற்றுகின்றது.

இவ்வாறாய்க் கொஞ்ச நேரம் கழித்த பின்னர், சன்னலில் சாய்ந்து இருப்பதையும் வெறுத்து, உட்புறம் திரும்பிச் சுற்றிலும் பார்த்தாள். உள்நடுவே ஒரு பெரிய நாற்காலி போட்டிருக்கின்றது. அதன்மேல் பல கடிதங்கள் வைத்து இருக்கின்றன. கணக்குப் புத்தகங்கள் வரிசை வரிசையாய் அடுக்கிக் கிடக்கின்றன. அரசனுக்குப் பல ஒற்றர்களிடமிருந்தும் வேற்றரசர்களிடமிருந்தும் வந்த கடிதங்களுள் சில பிரித்தும் சில பிரிக்கப்படாமலும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் அவ்வவ் வரசனுடைய விருதும், கொடியும், அடையாளமாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் நடுவே ஒரு கடிதம் விரித்துக் கிடக்கின்றது. அதன் மேல் போட்டுள்ள முத்திரை மிக அகலம். பாதியை உடைத்துக் கடித்தத்தைப் பிரித்து இருக்கின்றார்கள். பாதி இன்னமும் ஒட்டிக் கொண்டிருக்கின்றது. அக்கடிதத்தைப் பார்த்ததும் பக்கத்தில் சென்றாள் லலிதை. அம்முத்திரையில் பதித்து இருந்தது ஓர் யாளி. வயிற்றுக்குக் கீழ்ப்பாகம் சிதைந்து போய் இருந்தது. இது யாருடைய அடையாளமோ என்று உள்ளே பார்த்தாள். தலைப்பில் "ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்" என்ற வாக்கியம் பதிப்பிக்கப் பட்டிருந்தது. அதன் கீழுள்ள ஜோதிபுரி என்னும் வார்த்தையைப் படிப்பதற்குள் அம்மணிக்குத் தேகமெல்லாம் பரவசமாயிற்று; உடல் வியர்த்தது; மார்பு படபடத்துத் திடீர் திடீர் என்று அடிப்பது போல் தோன்றிற்று; கண்கள் துடிக்கின்றன; கை கால்கள் பதறுகின்றன. "மனமே, ஏன் பதறுகிறாய்? ஜோதிபுரியிலிருந்து நேற்றுக் கடிதம் வந்ததுதான் தெரியுமே. இன்னும் ஏன் உனக்கு இத்தனை பரபரப்பு! சற்றே நிதானிப்பாய்! என்ன எழுதியிருக்கின்றதோ அதை நானே பார்க்கின்றேன். ஐயோ! எனக்கு நிற்கவும் தாளவில்லையே" என்று கொண்டு தன் தகப்பனாருடைய ஆசனத்துக்கருகில் போட்டுள்ள சிறு நாற்காலியில் அமர்ந்தனள்.

இதற்குமுன் எத்தனை தடவை இதே நாற்காலியிலுட்கார்ந்து தன் தகப்பனுடன் கொஞ்சிக் குலாவி வார்த்தையாடி இருக்கிறாள் குழந்தையாய் இருக்கும்போது நம் லலிதை! அக்காலத்தில் இந்நாள் போல் எந்நாளாயினும் மனம் புழுங்கினளோ? தன் அருமைமகளுக்கென்றே பிரதாபசிங்கர் தனியாய்ச் செய்து வைத்தது அவ்வாஸனம். லலிதை குழந்தையாய் இருக்கும்போது அடிக்கடி தகப்பனாருடைய அறைக்கு வருவதுண்டு; செல்வக்குழந்தைகள் அவ்வாறு செய்வது அருமையா? அச்சமயத்தில் எல்லாம், குழந்தையை இவ்வாஸனத்தில் உட்காரவைத்துவிட்டுத் தமது இராஜாங்க வேலை பார்ப்பார் பிரதாபசிங்கர். குழந்தை பழங்களையும், கற்கண்டையும், மரப்பாச்சிகளையும் வைத்துக்கொண்டு விளையாடின காலமும் உண்டு. பிறகு தன் குரு கற்பித்த பாடங்களையும் பாட்டுகளையும் பாராமல் சொல்லிக்கொண்டும் பாடிக்கொண்டும் பிரதாபசிங்கர் மனதைச் சந்தோஷப்படுத்திய நாட்கள் சில; இலேகினிகொண்டு சித்திரம் வரைந்து தன் தகப்பனாருக்குக் காட்டிய காலம் சில; தன் தகப்பன் காலடியில் உட்கார்ந்து அவர் தன் வேலையைப் பார்க்க, அவரைத் தொந்தரவு செய்யாமல் புராணங்களையும் கதைகளையும் தன் மனத்துள்ளே அமைதியாய்ப் படித்துக்கொண்டு பொழுதுபோக்கிய காலமும் உண்டு.

… மை ஊரைக் கெடுக்கும் பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்.

இம்மாதிரியாய்ப் பதினாறு வருஷங்களாகப் பல தொழில்கள் செய்துகொண்டு அமர்ந்திருந்த ஆஸனம் அன்றோ அது! இரண்டு வருஷமாய் லலிதை அதிகமாகத் தன் தகப்பன் அறைக்குள் வருவதில்லை. வயதுவந்த பெண்ணாய் இருப்பதால் தன் தகப்பனுருடன் யாராவது ஆடவர் இருப்பின், அங்கே போதல் தகாது என்பதொரு காரணம்; தான் அடிக்கடி அவ்வறைக்குட்போய் அவருடைய இராஜகாரியத்துக்கு இடையூறு செய்யக் கூடாதென்பதே மற்றொரு முக்கிய காரணம்.

கடிதம் படித்தாய்விட்டது; மறுபடி திருப்பிப் படித்தாள். முத்திரையை உற்றுப் பார்த்தாள். "ஸத்யமேவ ஜயதே" என்று மனனம் பண்ணினாள். மற்றொரு முறை கடிதத்தைப் படித்தாள்; அதை முத்தமிட்டுக் கொண்டாள். கைகள் இரண்டையும் கூப்பிக்கொண்டு "என் அன்பைப் பூர்த்தி செய்யவேண்டும், ஈசா" என்றாள். மறுபடி கடிதத்தைப் பார்த்து, இதையேன் நான் என் அறைக்குக் கொண்டுபோய்ச் சாவகாசமாய்ப் படித்துவிட்டு மறுபடி கொண்டுவந்து வைக்கக்கூடாது?" என்று அதை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். அச்சமயத்தில் தூரத்திலிருந்து வரும் மணியோசை காதில் பட்டது. உற்றுக்கேட்டாள். "ஹா ஹா! மறந்தேனே! பேதை நான்! என்ன சஞ்சலம்! என்ன மறதி! என் அன்பு ஈடேறவேண்டுமென்ற வருத்தத்தில் என் அம்மை இராஜராஜேச்வரியையும் மறந்தேனே! ஆச்சரியம்! என் அம்மையும் சபாமண்டபத்தில் இருக்கின்றாள். யான் சென்று பூலோக நாதரையும் இராஜராஜேச்வரியையும் வேண்டி வருகிறேன். அவர்களே என் மனதைக் குளிரச் செய்யவேண்டும். 'ஆலயம் தொழுவது சாலவு நன்று' என்று குழந்தையாய் இருக்கும்போதே குருநாதர் எனக்குக் கற்றுக் கொடுக்கவில்லையா?" என வெகு வேகமாய் ஓடி ஒரு சேடியை அழைப்பித்து, புஷ்பம், சந்தனம், வெற்றிலே, பாக்கு, கனிவகைகள் இவற்றுடன் கோயிலுக்குப் புறப்பட்டாள்.

கோயில், அரண்மனைக்குச் சற்று அப்பால் இருக்கின்றது. முக்கியமாய் இக் கோயிலுக்கு அரண்மனை ஜனங்களே வருவது வழக்கம். பட்டணத்துக்குள் பல கோயில்கள் இருந்தனவென்று சொல்ல வேண்டுவதில்லை. ஆகையால் சாதாரண நாட்களில் கூட இக்கோவிலில் அதிகக் கூட்டம் இருப்பதில்லை. அதிலும் இன்று பாட்டுக் கச்சேரி விமர்சையில் ஒருவருமே வரவில்லை எனலாம். வந்த சிலரும் சாயங்கால பூஜை முடித்துக்கொண்டு புறப்பட்டுப் போய் விட்டனர். லலிதை சப்தம் செய்யாமல் உட்சென்று பூலோக நாதர் கோவிலில் அர்ச்சனை செய்யும் பிராமணோத்தமர் பக்கத்தில் போய் நின்றாள். அவர் அர்ச்சனை செய்து கொண்டு கடவுள்மீது தியானமாய் இருந்தபடியால் கவனிக்கவில்லை. மெதுவாய் ஆண்டவனுக்குத் தண்டனிட்டு, கருணைக்கடலை ஸ்தோத்திரம் செய்யத் தொடங்கினாள்.

அர்ச்சனை முடிந்ததும் பிராமணர் திரும்பிப் பார்க்கவே வியப்படைந்தார். என்ன ஆச்சரியம்! அடுத்த அறையிலிருந்து இராஜராஜேச்வரிதான் இங்குவந்து யான் செய்யும் பூஜையைச் சோதனை செய்கிறாளோ, என்று மலைத்தார். லலிதை அவரை அதிக நேரம் மலைக்க இடங்கொடுக்காமல் "சுவாமி, பூஜை செய்து கொண்டுபோக வந்திருக்கிறோம்" என, அவர் அவளை யார் என் அறிந்து, சேடி கையிலிருந்த தட்டைவாங்கிக்கொண்டு கிரமப்படி பூஜைமுடித்து என்னம்மை கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போனார்.

இராஜராஜேச்வரிக்கு அன்று செய்திருந்த அலங்காரம் என்னவென்று சொல்வது! லலிதை உடல் பூரித்து நாக்குழற, மனம் தடுமாற மஹா உருக்கத்துடன் தேவியைப் புகழ ஆரம்பித்தாள். ஸ்தோத்திரம் முடிந்ததும் தேவியைப் பார்த்து "என் தாயே! புத்திக்கு எட்டா ஆதி சக்தியே! பிரம்மாதி தேவர்தெரிந்தறியமாட்டாதவளே! என் மனோபீஷ்டம் கைகூட அருள்புரிய வேண்டிய தயை உன்னிடமின்றி வேறு யாரிடம் இருக்கின்றது!" என்று இவ்வாறு வேண்டி மறுபடி லோக மாதாவை வணங்கி நின்றாள். அப்பொழுது அம்மையின் மேல் அர்ச்சனை செய்திருந்த புஷ்பங்கள் 'பலபல' வென்று உதிர்ந்தன. அதைக் கண்ட சேடி "லலிதாம்பிகே! பெண்ணரசீ! உன் விருதம் கைகூடும்; நீ அஞ்சேல்" என்று சொல்லித் தேற்ற இருவரும் அரண்மனைக்குத் திரும்பினர்.

இவர்கள் அரண்மனை சேரும்பொழுது

ஊருடன் பகைக்கில் வேருடன் கெடும்.

தான் சபாமண்டபத்திலிருந்து பலரும் வந்துகொண்டிருக்கின்றனர். பாட்டுக் கச்சேரி இவ்வளவு சீக்கிரத்தில் முடிந்துவிடக் காரணம் யாதோவென்று லலிதை வியந்தாள். ஆயினும் அதைப்பற்றி அதிகமாய்ச் சிந்திக்கவும் கூடவில்லை. அன்றிரவில் லலிதை தன் தாயுடனும் மற்ற ஸ்திரீகளுடனும் கூடி நேரம் சென்று போஜனம் செய்ய இஷ்டப்படவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. பாபம்! லலிதைக்கு ஜனக்கூட்டமே வெறுப்பாய் இருந்தது. ஆகையால் தனக்குப் பசி அதிகம் என்று சாக்குச் சொல்லிவிட்டு ஒரு சேடியின் உதவியால் சாப்பாடு முடித்துக்கொண்டு ஒருவர் கண்ணிலும் படாமல் தன் அறையில் புகுந்து தனியே யிருந்தாள்.

ஆண் பெண் இரு பாலர்களுக்கும் இத்தகைய காலம் ஒன்று வருகிறதென்பது திண்ணம். எவர்தான் மன்மதன் பாணத்துக்குத் தப்பி நின்றவர்? திரிலோகேசுவரனை பரமசிவனும் காமன் வலையில் அகப்பட்டு விழித்தான் என்றால் ஏழை ஜனங்கள் அவன் முன் எம்மாத்திரம்! லோகத்தின் ஆரம்பம் முதல், லோகம் இனிமுடியும் வரையில், மற்ற எந்தக் காரியம் எவ்வழி நடப்பினும்—காதலரின் அன்பின் போக்குமட்டும் ஒரேமாதிரிதான். தத்துவ சாஸ்திரிகள் என்ன சொன்னாலும் சொல்லட்டும்; வேதாந்திகள் துச்சம் துச்சம் என்று தூஷிக்கட்டும்; இந்த அன்பு என்பது ஒன்று இல்லையேல் உலகம் அன்றே நாசந்தான். உணர்ச்சிக்கெல்லாம் அதுசிறந்தஉணர்ச்சி; ஆனந்தத்துக்கெல்லாம் மேலான ஆனந்தம். ஆண் பெண் இரண்டு பேர்களுக்குள் ஏற்படும் இவ்வன்பே மேன்மேல் முதிர்ந்து வீட்டின் அளவாய்ப் பெருகி, அப்பாலும் ததும்பி, பிரபஞ்சத்தையெல்லாம் தன் மயமாய் எண்ணும் ஞானமாகின்றது. 'ஏகம் ஸத்' என்று உணரும் கடைசி உணர்ச்சிக்குப்படிப்படியாய்வழிகாட்டுவது அன்பே. உலகின் கண் இவ்வுணர்ச்சியே இல்லையென்போன் கள்வன். அன்பென்பதே இல்லையென்றும், அவ்வுணர்ச்சிபொய்யுணர்ச்சியென்றும் நாஸ்திகவாதம் செய்யும் மனிதரும் சிலர் உண்டு. அவர்கள்தான் உலகத்தை நாசமாக்குவோர்; அன்பு ஒன்றே உலகத்தைப் பரிசுத்தப்படுத்தும் கருவி. காதலரன்பைச் சரியாய் உணர்ந்தவன், மற்ற ஸ்திரீகளைத் தன் சகோதரிகள்போல் எண்ணுவான். அன்புகாட்டுவதுபோல் பாசாங்கு செய்து கடைசியில் குடியைக் கெடுக்கும் பாவிகளும், சிலர் உண்டு; அவர்களை நாம் கவனிப்போம் அல்லோம். தற்சமயத்தில் நம் லலிதையின் உண்மை அன்பின் போக்கைப் பார்த்து அவளுடன் நாம் அநுதாபப்படாமல் இருத்தலும் கூடுமோ?

நம்போலியர்களுக்கு நச்சுப் பிடித்துப் போவது போல் தோன்றினும், மறுபடி ஒரு முறை ஜயபாலன் எழுதிய கடிதத்தைப் படித்தாள். லலிதை அதைத் தன் மார்பின்மேல் வைத்துக்கொண்டு படுக்கையில் சயனித்தவாறே மனோராஜ்யம் செய்யவாரம்பித்தாள். தூக்கம் பிடிக்காவிட்டாலும் மனம் வெவ்வேறு வழியாய்ப்போய்ப் பலவித அநுபோகங்களையும்ஒன்று சேர்த்தது. அன்றுநடந்த விருத்தாந்தங்களும், முன் நடந்த விருத்தாந்தங்களும் ஒவ்வொன்றாய் நினைவுக்கு வந்தன. இவ்வித நினைப்புக்களில் ஆழ்ந்தபடியே மயக்கமாய் நித்திரை செய்துவிட்டாள்.

ஆயினும் அயர்ந்த நித்திரை யில்லை. கனவில் கண்ட பலவிதக் காட்சிகளுள் அன்று நடந்ததுபோல் ஒரு சங்கீத சபை அவள் கனவில் தோன்றிற்று. தானும் அங்கேபோய் இருக்கின்றனள். எல்லோரும் பாட்டுக் கேட்கும்போதே ஒரு சுந்தர புருஷன் அங்கே வருகின்றான். உடனே அவள் தாய் "லலிதா ஏன் சும்மா நிற்கின்றாய்? இன்று உன் மணநாள் அல்லவா? நினைவில்லையா?" என்கின்றாள். அதைக் கேட்டதும் தான் தலை குனிந்துகொள்வதாக எண்ணுகிறாள். இதற்குள் அந்தத் திவ்யபுருஷன் இவர்கள் இருக்கும் இடத்திற்கு நெருங்கிவிட்டான். "இவன்தான் எனது தமக்கை மகன் ஜயபாலன்; குழந்தாய், உனது நாதனை நிமிர்ந்துபார்" என்கின்றார் அவளது தகப்பனார். கடைக் கண்ணால் அவ்வழகிய வடிவைக் கண்டு ஆனந்திக்கின்றாள். இன்னொரு முறை நிமிர்ந்து நன்றாய்ப் பார்ப்போம் என்று எண்ணுவதற்குள், ஒரு விகாரமான மிருகமோ மனிதனோ என்னவோ அவள் எதிரில் வருகின்றது. தன் தாயையும் காணோம்; தந்தையையும் காணோம்; வருகிற உருவம் இன்னதென்று விளங்கவில்லை. பேசவும் நாவெழவில்லை. பக்கத்தில் அவ்வுரு நெருங்கி விட்டது. ஒரு பெருங்காற்றும் வீசிற்று; தன்னை

ஊரெல்லாம் வாழ்கிறதென்று வீடெல்லாம் புரண்டு அழுதால் வருமா?

அவ்வுரு பிடித்துக்கொள்ளுமோ என்ற பயத்தால் பின் நகருவதற்குள் கீழே விழுந்துவிட்டாள். "தூங்கும் குழந்தைக்குத் தூக்கிவாரிப்போட்டது." விழித்துக் கண்களைத் தேய்த்துக்கொண்டு எழுந்துபார்த்தாள். காற்றும் இல்லை. உருவமும் இல்லை. தீபம் பிரகாசிக்கின்றது. சேடி வாசற்படியண்டை நித்திரை போகிருள். ஜன்னலிலிருந்து மெதுவாய்க் காற்று அடிக்கின்றது. பட்டணம் சப்தமற்றிருக்கின்றது. வெகு தூரத்தில் நாய் குலைக்கும் சப்தம் கேட்கின்றது. இவையெல்லாம் கனவு; உண்மையன்று. ஆனால் உடலின் பதட்டமும், நெற்றியில் வியர்வையும் சற்றுமுன் கண்ட கனவின் காரியமாய் நின்றன.

உள்ளே மேலும் கீழும் உலாவினாள். படுக்கையின்மேல் ஜயபாலனுடைய கடிதம் கிடக்கின்றது. அதுவும் கனவல்ல. தன் தசப்பனுருடைய அறையில் பேச்சுக்குரல் கேட்கின்றது. சற்று கவனித்துக் கேட்கிருள், ஒன்றும் புலப்படவில்லை. தன் தாயும் அவ்வறையில் இருக்கின்ருள் என்பதற்கு அவளுடைய தாழ்ந்த குரலும் காதில் பட்டது. எவ்விஷயத்தைப்பற்றி இந்நேரத்தில் யோசிக்கின்ருர்கள் என்று ஆச்சரியப்பட்டாள். ஆனால் இரண்டொரு மாதமாய் இவ்வண்ணம் தன் தாய்தந்தையர் இரவில் வெகு நேரம் பேசிக்கொண்டிருப்பது வழக்கமென்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. கட்டிலில் உட்கார்ந்தாள். பக்கத்தில் இருக்கின்றது கடிதம். அன்பின் ஆக்கமும் மெல்ல மெல்ல விருத்தியடைந்தது. "என் கனவுதான் என்ன கனவு. ஈசா என் கவலை தீர்த்தருள்வாய்—" என்று தன் மனத்துள் பாடிக்கொண்டு மறுபடியும் படுத்துக்கொண்டாள்.

---

சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மஹாமஹோபாத்யாய பிரஹ்ம ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்.— ** நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும். சில மொழிபெயர்ப்புகளும், தற்காலத் திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில மிக எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. சிறுவர்களும் பெண்பாலாரும் இதனால பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்துகொள்ளலாம்.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### எனக்கு வேண்டியதில்லை

சில வருஷங்களுக்கு முன்னே பாலாற்றில் வெள்ளம் மிகவும் பெரியதாய் வந்தது. அந்த வெள்ளம் ஊர் ஊராயும், கிராமம் கிராமமாயும் அடித்துக்கொண்டு போயிற்று. வாணியம்பாடி முழுகிப் போயிற்றென்றுகூட ஜனங்கள் அப்போது சொல்லிக்கொண்டார்கள்.

அந்த வெள்ளம் வெகு வேகமாய் வந்துகொண்டிருக்கும் போது, பல பிணங்கள் மிதந்துகொண்டே போயின. வேலூரில், ஆற்றின்மீது பாலம் போட்டிருந்ததால், அவ்வூரார் பலர், வாராவதியின் மீது நின்றுகொண்டு வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகும் பிணங்களையும், சாமான்களையும் பார்த்துக்கொண்டு நின்றனர். அப்பொழுது வெள்ளத்தில் பெரிய வைக்கற்போர் ஒன்று அடித்துக்கொண்டு வந்தது. அதன் மீது, கிழவன் ஒருவனும், சிறு பெண் ஒருத்தியும் உட்கார்ந்திருந்தனர். வாராவதியண்டை வரும்போது வைக்கற்போர் புரளும்போலிருந்தது. கண்டவர்கள் எல்லோரும் 'ஐயோ' வென்று அலறினர். வேலூரிலுள்ள கோவிந்த செட்டியார் என்பவர் அங்குவந்திருந்தார். கிழவனும் பெண்ணும் இருக்கும் நிலைமையைக் கண்டு 'வெள்ளத்தில் வரும்இருவரையும் கரைசேர்ப்பவனுக்கு 500ரூபாய் இனும் தருகிறேன்' என்ருர். ஒருவரும் நகரவில்லை. "1000 ரூபாய்"!— ஒருவர் இருவர் அடி வைத்தார்கள்—ஆனால் வெள்ளத்தின் வேகத்தைக் கண்டு, பின் வாங்கினர். '2000' என்று கத்தினார் கோவிந்த செட்டியார். வைக்கற் போர் வாராவதிக்கு அருகே வந்துவிட்டது.

கூட்டத்தில் சப்தமுண்டாகிறது; சிலர் திரும்பிப் பார்க்க சிறுவன் ஒருவன் ஓடி வருகிருன். கிழவனும் பெண்ணும் இருக்கும் நிலைமையைப் பார்த்து இடுப்பில் அவன் துணி ஒன்றைக் கயிறுபோல் கட்டிக்கொண்டு, பாலத்தின்மே விருப்பவர்களை 'இன்னும் நீளமாக கட்டிப் பிடித்துக்கொள்ளுங்கள்' என்று கூறி ஜலத்தில் குதிக்கிருன். வெள்ளம் பயங்கரமாய் இரைச்சலிட்டுக்கொண்டு ஓடுகிறது; வைக்கற்போரும் புரள முயலுகிறது.

ஊரை உழக்கால் அளக்கிருள், நாட்டை நாழியால் அளக்கிருள்.

அப்பப்ப! என்ன கஷ்டம்! என்ன தைர்யம்! சிறுவன் வைக்கற் போரின்மேல் ஏறி, கிழவரை ஒரு கையாலும், பெண்ணை மற்றொரு கையாலும் கட்டிக்கொண்டு மறுபடியும் குதிக்கிறான்—ஐயோ!—வைக்கற்போர் கவிழ்கிறது. அது இருந்த இடத்தில் பெருஞ்சுழல் உண்டாகிறது. தைர்யமாய் ஜலத்தில் குதித்த பையனெங்கே!

பாலத்தின் மீதுள்ள ஜனங்கள் கண் கொட்டாது பார்த்து நிற்கின்றனர்—ஆ! அதோ பையன் தலை தெரிகிறது. தைர்யமாய் நீந்துகிறான். கரையிலுள்ளவர்கள் துணிக்கயிற்றால் அம்மூவரையும் இழுத்துக் கரை சேர்க்கின்றனர். மூவரும் மரணத்தினின்றும் தப்பினர்.

கோவிந்த செட்டியார் 2000 ரூபாய் எடுத்துச் சிறுவனை அழைத்து, “அப்பா, நீ சிறியவனாயிருந்த போதிலும், மிகுந்த தைர்யமுள்ளவனாயிருக்கிறாய். உன்னைப்போல் தைர்யசாலிகளை நான் இதுவரையிலும் கண்டதில்லை. இதை நீ எடுத்துக்கொள் என்று நீட்டினார். சிறுவன் ‘ஐயா, தங்களுக்கு அநேக நமஸ்காரம். உம்முடைய பணம் எனக்கு வேண்டியதில்லை. வீட்டையும் பொருளையும் இழந்த பெரியவருக்குக் கொடும். அவருக்கு அந்தப் பணம் மிகவும் உபயோகமாயிருக்கும்” என்று சொல்லிவிட்டு கூட்டத்துள் நுழைந்து ஓடிப் போய்விட்டான்.

இந்த விஷயத்தைப்பற்றிச் சற்று யோசிப்போம். தன் உயிருக்கு அபாயம் உண்டான போதிலும் தைர்யமாய் வெள்ளத்தில் குதித்த சிறுவன், கோவிந்த செட்டியார் கொடுத்த வெகுமதியை வாங்கிக் கொள்ளக்கூடாதா?

வாங்கிக்கொள்ளலாம்.

அப்படியானால் அவன் ஏன் வாங்கிக் கொள்ளவில்லை?

தன்னைவிட வீடு முதலியவற்றை இழந்த கிழவருக்கும் அவர் பெண்ணுக்கும் அந்தப் பணம் மிகவும் உபயோகப்படும் என்ற எண்ணத்தினால், அவன் தன் ஸுகத்தைக் கவனியாது, மற்றவர்களுடைய ஸுகத்தையே கவனித்தான்.

அவனல்லவா உண்மைச் சிறுவன்?

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி : 20-ம் காட்சி

நளனென் னிறைவ னலதிந்த நாயேன்
உளனென் னறைபுகுந்த துண்டேல்—ஒளியாது
காற்றே கதிரோ கழறென்ன வின்றினதென்
கூற்றே கதித்தவெங்குங் கூடி.

கேசினி கூறிய மொழிகளைக் கேட்கக் கேட்கத் தமயந்தியின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் அரும்பி, ஒன்றாய், இரண்டாய், பலவாய், அளவு கடந்த வெள்ளமாய்ப் பெருகலாயின. அச்சமயம் அவள் மனத்து அச்சமும் அன்பும் ஆத்திரத்துடன் மயங்கிவிளங்கின. அதுவரைக் காணாதிருந்த தனது தலைவரைக் காண அவள் உள்ளம் துடித்தது. “அவர் வாகுகரே! எனினும் எனது உத்தமத் தலைவரேயாகும். அவரே என் தலைவர்; எனது நளமன்னவர்; என்னுயிர்க்கு ஒளியாய் இருப்பவர். அவரை என்னால் இனிச் சற்றுங் காணாதிருக்க இக்கண்கள் கருதா; என் மனமும் இடந் தரா. அந்தோ! தமயந்தீ! இன்றே உன் எண்ணம் பலித்தது. இனியுன் கவலையொழி. உன் தலைவரைக் கண்டாய், துயரத்தை எல்லாம் விண்டாய். கால தாமதம் செய்யாது அவரைக் கண்டு, அவரது, சூம்பியதாயினும், நிலை தவறா உத்தம வடிவைக் கண்களிற்கு விருந்தாக்கு. சீக்ரம்! சீக்ரம்! பிரிந்தவர் கூடினால் பேசல் தகாது. உடனே புறப்படு” என அவள் தன்னோடு தானே பேசினாள்.

அப்போது அவள் முகம் துயரமென்னும் மேகத்திலிருந்து வெளி வந்த சந்திரனைப் போல வளப்பத்துடன் விளங்கியது. நெடுநாளாக மாசுகொண்டு விளங்கிய அம்முகம், அப்போது களங்கத்துடன் விளங்கும் சந்திரனுக்குச் சரிசமானமாக விருக்குமெனலாம். ஆயினும் அவ்வழுக்கைக் கீறிக்கொண்டு விளங்கிய அவளது பேரெழில் அவளுக் கப்போது ஓர் புதிய உயிரையே தந்தது. தனது சந்தேகமுற்றுந் துறந்த அவள், கேசினியைப் பார்த்து, ‘கேசினீ! நீ என் உயிர்க்குயிரானவள்; என் உண்மைத் தோழி; எனக்கு உயிரையே யளித்த உத்தமி. இன்னமும் யாதுதான் எனக்கு நீ செய்யமாட்டாய்? என் தாயிடம் சென்று

ஊரைப் பிடித்த சனி, பிள்ளையாரையும் பிடித்தது.

யான் பலவிதமும் வாகுகரிடம் ஸங்தேகங்
கொண்டு பரீட்சித்ததை அவரிடம் கூறு.
வாகுகரே என் கணவரென நான் நிச்சயத்
திருப்பதையும் சொல்லு. உருவம் வேறு என்
பதொன்றே ஸங்தேகம். இருந்தாலென்ன?
நேரிற்கண்டால் அது என்னவெனத் தானே
எனக்கு விளங்கும். ஆகவே அவ்வாகுகரைக்
காண என் மனம் பேராவல் கொள்கிறது.
ஒன்று அவரையாவது இங்கு தருவித்தல்
வேண்டும்; அல்லது நானே அவரைக் காண
வேண்டும். ஆகவே என் தந்தைக்குத்
தெரிந்தோ, தெரியாமலோ, எது தகுமோ
அந்த விதம், அவரை நான் காணும்படி ஸம்
மதம் பெற்றுவா. நான் சொல்வது தெரிந்
ததா? சீக்ரம்! விடைபெற்றுவா. ஆலஸ்யம்
வேண்டாம்" என்று சொல்லித் தனது தா
யிடம் அனுப்பினாள்.

தனியே நின்ற தமயந்தி தனக்கும் தெரியா
மல் துக்கமடைந்தாள்; விம்மிவிம்மி யழுதாள்.
என் செய்வாள்? "யாது காரணம் பற்றி
அவர் உருவம் அவ்வாறு குன்றியதோ! எந்
தக் கஷ்டத்தினால் அவர்க்கு அத்துயரம் ஏற்
பட்டிருக்கும்? ஒருவர்க்குந் துன்பம்செய்யாத
என் அன்பற்கு, இவ்வாறு கெடுதி யார் புரிவர்?
அத்தனே! உம்மைக் காணாது நான் நித்தம்
நித்தம் பட்ட துயரம் உமக்குத் தெரியுமா?
உத்தமனே! உம்மைக் கண்டும் காணாதிருக்
கின்றனனே. உம்மையல்லால் எனக்கு உலக
மேது? உமது வடிவத்தைப்பற்றி எண்ண
வும் என் மனம் பதறுகிறதே! பெரியவரே!
உம்மைக் கண்டால் யான் எப்படிச் சகிப்
பேன். பாவியேன் இருந்தும் உமக்கு இவ்வாறு
வர நேர்ந்ததே! அந்தோ——"என இவ்வாறு
அவள் எண்ணி எண்ணி நெடு மூச்சுவிட்டுக்
கொண்டு சுற்றுப்புறத்தி லிருப்பவை இவை
யென்றறியாது உணர்வற்றுக் கிடந்தாள். தரை
மேற் படிந்து, மனம் நொந்து மயங்கி விளங்
கிய அவளிடம் கேசினி விரைவில் ஓடோடி
யும் வந்தாள். எனினும் அவ்வல்ப நேரமும்
தமயந்திக்குப் பெரும் யுகமபோலவே யிருந்
தது.

"யான்போய் உமது விஷய முழுதையும்
சொன்னேன்; உமது அபிப்பிராயததையும்
வெளியிட்டேன். அப்படியே செய்ய உமது
பெற்றோர் இருவரும் விடை யளித்தனர்"
என்று கேசினி சொல்லி முடிப்பதற்குள்,
தமயந்தி தனது அரையுள் நளரைத் தருவிக்
கத்தக்க ஏற்பாடுகள் செய்தனள்; அவரது
வரவை ஆவலோடு எதிர்பார்த்தனள்.

நளமன்னவர் அவ்வரையுள் புகும்
பொழுதே அவர் மனத்தில் நெடுநாளாகப்
பொதிந்துகிடந்த பெருந்துயரம் கண்
ணில் நீருருவாகத் ததும்பி வெளி வந்தது.
தமயந்தியைக் கண்டதும் அச்சமும் துக்க
மும் ஏக்கமும் அவர் மனத்தைக் கவர்ந்
தன. கண்களிலிருந்து கசிந்த கண்ணீர் அவர்
பார்வையை மறைத்த தெனினும், அடக்க
முடியா ஆத்திரத்தோடு 'ஆ!' என்றலறிக்
கொண்டு அவள் தன்காலில் வீழ்ந்ததை அவர்
கண்டார். அன்று கட்டியிருந்த பாதித்துணி
யோடு மாசுபடிந்து, மயிரைச் சடையாக்
கிக் காதற்றவங்கொண்டு விளங்கிய அவளது
துன்பத்திலும் இன்பங்கொண்டு விளங்கிய
மெல்லிய உருவையும் தமது நீர் கசியுங் கண்
களாலேயே அவர் கண்டார். அவர் செய்த
தவறே அவரது தொண்டையை அப்போது
பேசவிடாது அடைத்துக் கொண்டது போ
லும்! பின் ஏன் அவர் பேச நா எழாது அப்
படிக் கண்ணீர் பெருக்கிக் கம்பம்போல நிற்க
வேண்டும்! தமயந்தி என்செய்வள்? அவளது
ஆத்திரமும் அன்பும் முந்திமுந்தித் தூண்
டப் பின் வருமாறு வாகுகரை நோக்கி மொ
ழியலுற்றாள்:

"ஐயா! பெரியவரே! யான் ஏதோ கேட்
கிறேன் என்று கோபியாது தயவுசெய்து மறு
மொழி அளிக்கவேண்டும். தாங்கள் எல்லா
முணர்ந்தவரென யான் கேள்விப்பட்டது தவ
றாகாதென்பது உம்மைக் கண்டவ ரெவரும்
நம்புவர். தருமங்கள் எல்லாவற்றையும்
உணர்ந்த எவராவது தமது மனைவியை
நடுக்காட்டில், அவள் தூங்கும் சமயத்
தில் தனியே விட்டுவிட்டு ஓடியதைத்
தாங்கள் எங்காவது கண்டதுண்டா? அந்
தோ! அவ்வாறு யார் செய்ய முடியும்?

[கொள்வாள்,
குறைவில் அன்பினள், பிழையிலள், கண்படை
இறையும நீப்பரும் மனைவியை இருள்படு கானில்
அறனி லூக்குரு நளனல தியாவரே யகல்வார்?

அவ்வாறு அவர் என்னைக் காட்டில் தனியே
விட்டுப்போக யான் என்ன தவறுசெய்தேனோ

ஊரை வளைத்தாலும் உற்ற துணை இல்லை, நாட்டை வளைத்தாலும் நல்ல துணை இல்லை.

அறியேன். தேவர்களைச் சிறிதும் பாராட்டாது அவரையே எனது கடவுளாக அன்று யான் வரித்ததை அவர் மறந்தனரா? அவரையே பின்பற்றித் தொடர்ந்து அழியா அன்போடு அவரிடம் யான் விளங்க என்னை அவர் ஏன் வெறுக்க வேண்டும்? அவர்க்கு அப்படிச் செய்ய எப்படி மனம் இடந் தந்தது? தேவர்கள் முன்பு அக்கி சாக்ஷியாக என்னை மணந்தபொழுது செய்த உறுதிமொழியைக் கடந்து அவர் எப்படி நடக்கலாம்? அப்படி நடக்க நான் என்ன தவறுசெய்துவிட்டேன்? தன்னை நம்பி யடைந்தவரை நடுக்காட்டில் விடுவது தரும நெறியில் நடக்கும் க்ஷத்திரியற்கு எப்படிப் பொருந்தும்?—"

இவ்வாறு அவள் பேசும்போது அவளது மொழியை, அவளது கண்களிலிருந்து வழிந்து விழுந்த கண்ணீர்த் துளிகள் இடைஇடையே தடுத்தவாயினும், அவள் பலநாளாய்த் தனது மனத்துள் வைத்திருந்த விஷயங்களை வெகு சமத்காரமாக வெளியிட்டனள். கண்ணீர் வெள்ளத்தில் ஆடிப் புனிதமாகி விளங்கிய தமயந்தியின் முகத்தாமரை மலர வந்த நள மன்னவன், அவளைக் கண்டதும், துன்ப மேலீட்டால் அசைவற்று மயங்கிக் கிடந்தான். அப்போதவன் தன்னைத் தமயந்தி இன்னானென அறிந்து விட்டனளென நிச்சயித்தான்; அவள் உண்மையில் தன்னை நாடிக் காணச் செய்த உபாயந்தன்னையும் ஒருவாறு உணர்ந்தான். எனினும் மானத்தின் கயிற்றால் பிணிக்கப்பட்ட அவன், பின் வருமாறு பேசினான்:—

"பெருமைக் கிருப்பிடமானவளே! பயத்தால் நடுங்கி மானத்தினால் ஒடுங்கித் தலைவனைக் காண ஆவல் கொண்ட குணமுடையவளே! நளன் தானாகவே உன்னைக் காட்டில் விட்டுச் செல்லவே யில்லை. அவன் கவருடியதும் அவனது சொந்த புத்தியாலல்ல; உன்னைப் பிரிந்ததும் சித்த ஸ்வாதீனத்துடனன்று. அந்தக் கலியின் வேகத்தால்தான் நான் உன்னைத் தனியே விட்டுத் தவிக்க நேர்ந்தது. நீ யிட்ட கடும் சாபம் அவனை இதுகாறும் தொந்தரை செய்யா நிற்கின்றது. அச்சாபத்தீ கொளுத்த, அவன் எனது உடலில் மயங்கிக் கிடந்தான். எனினும் அவனை நான் எனது நடையாலும் நெறியாலும் வென்றேன்; துக்கக் கடலைக் கடந்து, ஆநந்த ஸாகரத்தின் எல்லையை யணுகினேன். அக்கலியொழிந்ததால்தான் நானுமிங்குவந்தது. நளன் உன்னை என்றும் பிரிந்து சுகித்திலன்; அல்லும் பகலு மவன் சிந்தைக் காளாகித் தமயந்தியின் கனவையே கண்டு மனத்துயருள் ஆழ்ந்து கிடந்தான். அவனைப்பற்றித் தவறாக எண்ணற்க. அவன் ஒழுக்கம் தவறினன் அல்லன்; தவறவு மாட்டான். அதனாலே இப்போதும் உன்னை நேரிற் காணும் பாக்கியம் பெற்றான்; துன்ப முற்றும் அற்றான். அவன் உன்னைக் காணவென்றே இங்கு வந்தனன்; தனது உண்மைக் காதலியின் நிலையைக் காணவெனவே வந்தனன். அதைத் தவிர்த்து அவனுக்கிங்கு வரக் காரண மியாது? நற்குண முடையவளே! பொறுமைக்கு அடைக்கலமே! ஆயினும்;

*தூய கற்பினார் காதலர் துறப்பினும், மற்றோர்*
*நாய கற்பெற நினைவர்கொல்?*

கொண்ட கணவனை விட்டு மற்றொருவனை மணக்க உத்தமி எவளுக்கு மனம்வரும்? தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் நடக்கப் போவதாக உன் தந்தையாரது கட்டளைப்படி தூதர் அநேகர் சொல்லிக்கொண் டலைகிறார்களே! அதைக் கேட்க எனக்குப் பெருஞ் சுகம் எப்படி ஏற்படும்? உனக்கேற்ற புருஷனை நீ தேடி, மீண்டும் மணக்க விருப்பதை நாடி யல்லவா ருதுபர்ணரும் இங்கு வந்தனர்? அகோ! உத்தமியான உனக்கு என்னைப்பற்றிய சிந்தை முற்றும் ஒழிந்தது போலும்! என் செய்வது? எல்லாம் கலியால் ஏற்பட்டது. காட்டிலுன்னைத் தனியே விட்டுச் சென்றவனிடம் அன்பு எப்படி நீடித்திருக்க முடியும்? யான் செய்த வினையே இத்தகைய முடிவை ஏற்படுத்தி யுள்ளது. வருவன தாமே வரும். அல்லவா?"

இவ்வாறு நளமன்னவன் தன் மனத்துள் துன்ப மூட்டிய ஸந்தேஹத்தை ஒருவாறு வெளியிட்டுக் கண்களில் நீர் சிந்த வாளா நின்றான். அவன் உடம்பு அப்போது அசைவற்றுக் கிடந்தது. துன்பத்துள் பாய்ந்து விளங்கிய அவனது நிலையை அப்போது காண்பது பெரிதும் பரிதாபம். ஒருவேளை தமயந்தி உண்மையாகவே வெறுத்து விட்டனளோ என அவன் கவலை கொண்டதுமுண்டு. ஆகவே

ஊரோடு ஒக்க ஓடு நாடோட நடு ஓடு.

அவன் துயருழந்து கிடந்தான். அந்நிலையைக் கண்ட தமயந்தி தன் முன் நிற்பது நளனே என உணர்ந்து அஞ்சினாள்; நடுங்கினாள்; கண்ணீர் பெருக்கினாள்; அடியற்ற மரம்போல் கீழே விழுந்தாள்; சற்றே தெளிந்து எழுந்தாள்; தனது கணவனது பாதத்தில் வீழ்ந்து பணிந்தாள்; கண்ணினின்று கசிந்த நீர், மாலை மாலையாக விழ அடங்கிய குரலில் மொழிந்தனள்:—

"என்றும் என் மனத்தைக் கொள்ளை கொண்ட பெரியவரே! நற்குணங்களெல்லாம் நிரம்பியவரே! என்னிடம் தாங்கள் கொள்ளும் ஸந்தேகம் சிறிதும் காரணமற்றது. தேவர்களையும் தள்ளி உம்மையே வரித்த யான் எப்படி உம்மை யன்றி மற்றொருவரை எண்ணமுடியும்? உம்மைக் காணவென்றே யான் இப்போது செய்ததிச் சூழ்ச்சியெல்லாம். உம்மை யறிந்து கொணரப் பத்துத் திசைகளினும் யான் பிராஹ்மணர்களை அனுப்பினேன். பர்ணாதர் என்பவர் நான் சொல்லி யனுப்பிய மொழிகளுக்கு ருதுபர்ண ஸபையில் யாரும் பதில் சொல்லாதிருக்க. தாங்கள் சொல்லிய பதிலை வந்துரைத்தனர். இவ்விரண்டாவது சுயம்வரம் என்ற பேச்சு, நான் தங்களைக் காணும் அவாவினால் செய்த ஓர் உபாயமே யல்லாது வேறல்ல. உம்மை யல்லால் யார் நூறு யோசனை தூரம் ஒரே நாளில் குதிரைகளை ஓட்டவல்லவர்? சுயம்வரம் என்ற பேச்சு முழுதும் பொய். மேலும் அப்பேச்சை ருதுபர்ணர் ஒருவரே அறிவர். பிரிவடைந்து துயர்படிந்த யான் அவ்வாறு செய்தது ஒரு வேளை பேதைமையாய் இருந்தாலும் இருக்கலாம். எனினும் குற்றமற்ற எண்ணத்துடன் செய்ததை மன்னிக்க விரும்புகிறேன். தயாளகுணம் நிறைந்தவரே! இதோ உம்மை வணங்கிச் சொல்கிறேன். இது உறுதிமொழி. யான் ஒருநாளும் உம்மை யன்றிஎவரையும் சிந்தையாலும் நினைத்திலேன் என்பது நிச்சயம். அதை இவ்வுலக முழுதும் அலைந்து, எல்லாவுயிர்க்கும் பிராணனாகி விளங்கும் இவ்வாயு பகவனே அறிவர். யான் தவறாய் நடந்திருப்பது உண்மையானால் எனது உயிராகிய பிராணனை அவரே கொள்ளட்டும். மேலும், எவற்றிற்கும் மேலாக ஆதிச்சுடராக ஆகாயவீதியில் நடக்கும் ஆதித்யமூர்த்தி யான் பாப சிந்தை கொண்டிருப்பனேல் என் உயிரையே கவரட்டும். எல்லார் மனத்துள்ளும் தவழ்ந்து ஆநந்தமூட்டும் அச்சந்திரக் கடவுள் யான் உண்மை நெறி கடந்திருப்பின் என்னை நாசம் செய்யட்டும்."

இவ்வாறு மொழிந்து கொண்டிருக்கும் போதே தமயந்தியின் குரல் வரவர இனிமையும் உறுதியும் வாய்ந்து விளங்கின. அவளது முகம் அப்போதவளுடைய உள்ளத்து உண்மை நிலையை வெளியிட்டதென்பது தவறாகாது. எனவே அவள் மேலும் "அவர் மூவரே ஸதா உலகை ஆள்பவர்; எவரையும் பாதுகாக்குங்கடவுளர்; எவற்றிற்கும் ஜீவசாட்சியாய் இருப்பவர். அவரே எனது உண்மை நிலையை அறியக்கூடியவர். யான் என் ஐயனை, நிடத நாட்டு மன்னனை, கடவுளரையுங் கணிசியாது மாலையிட்ட நளர் என்னு மன்னவனை யன்றி வேறு யாரையும் திரிகரணங்களாலும் நினைத்திலன் என்பது, உண்மையேல், அதை அவரே வெளியிடட்டும்; இன்றேல் என்னைக் கைவிடட்டும்" என வெகு ஆத்திரத்துடன் நெஞ்சமுலர, துயர மீதூர, கண்களிலிருந்து நீர் பெருகியோடத் துயரமும் இனிமையும் குலவ மொழிந்தாள்.

> 'தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்ற லரிது'

என்ற அனுபவமொழி பொய்த்திலதென்பது தமயந்தியிடத்தே விளங்கியதென்பதற்கு அங்கு அப்பொழுதெழுந்த அசரீரியே காட்டும். "அரசே! இவள் உத்தமி; கற்பிற் கிருப்பிடம்; உன்னைக் காணவென்றே இவ்வுபாயம் செய்தனள். அன்பின் வீடுபட்டவள் செய்ததில் தவறெப்படி யிருக்க முடியும்? உன்னையல்லால் ஒரே நாளில் நூறு யோசனை தூரம் யாரே தேரை நடத்தமுடியும்? உமது பொருளை நீர் அடைந்து விட்டீர். தமயந்தியை நாங்களே இம்மூன்று வருஷமும் காத்து வந்தனம். எனவே, கவலையுறேல்; அவளிடம் சிறிது ஐயுறேல். தமயந்தி தானே உன்னைக் கண்டு அடைந்திட்டாள். பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?" என்ற ஆகாய வாணியைக் கேட்ட மன்னன் அளவுகடந்த ஆனந்தங் கொண்டான்; களித்தான்; உடல் புளகித்தன்பமொழிந்தான்; ஆசைக்கண்ணீர்வடித்து அசைவற்றுக் கிடந்தான்; ஸந்தேஹம் ஒழிந்த

ஊர் இரண்டு பட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS & NOTES

**லார்ட் ஸின்ஹா இந்திய உபமந்திரி.**

இங்கிலாந்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பார்லிமெண்ட் பிரதிநிதிகளால் ஏற் பட்ட ராஜசபையில் கனம் மாண்டேகு அவர்களை இந்தியா மந்திரியாகவும். ஸர். எஸ். பி. ஸின்ஹா அவர்களை இந்திய உப மந்திரியாகவும், நியமிக்கப்பட்டது இந்நாடு முழுவதும் களிப்பிற் கிடந்தரும். கனம் ஸின்ஹா அவர்கள் பிரபுக்கள் ஸபை யில் உத்தியோக முறையில் இடை இடை யே தோன்றிப் பிரதி நிதிகளின் கூற்றுக் குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பைக் கவனித்து, அவரை ஆங்கிலப் பிரபு பட்ட தாரிகளின் கோஷ்டியில் ஒருவராக நியமித்த ஆங்கிலப் பிரதானியாகிய கனம் லாயிட் ஜார்ஜ் அவர்களது பெருந்தன்மையும், மதியூகமும் ராஜதந்திர தாராளத்தன்மையும் கொண்டாட த்தக்கன. லார்ட் ஸின்ஹா அவர்களே உப மந்திரி பதவினயயும், லார்ட் என்னும் பட்டத் தையும் முதன்முதல் பெறும் பாக்கியம் பெற்ற இந்தியர் ஆவர். ஆனால் இடை இடையே பட் டங்கள் போன்ற சிற்றுண்டிகளால், ஆங்கில ஆட்சியின்கீழ் இந்திய நிர்வாகத்தைத் தாமே பொறுப்பேற்க விரும்பும் இந்தியரது அவா பூர்த்தியடையமுடியாது. இதுவே லார்ட் ஸின்ஹாவின் அபிப்பிராயமும் எனக் கேட்க யாவர்க்கும் சந்தோஷம் விளைக்கா திருக்காது.

⁂

**சென்னையில் ஸினிமோடோகிராப்**

ஸினிமோடோகிராப்களால் எளியவர்க்கு இந்தக்ஷாமநாட் களில் ஏற்படும் தொல்லைகளை நாம் கவனிப்பது தவறாகாது. நாடோறும் காலைமுதல், மாலை வரை உழை த்து, வந்த பணத்தை வீணே கூட்டங் கூடும் இவ்விடங்களில் செலவுசெய்து, பெண்டு பிள்ளைகளைத் தவிக்கவிடும் தொழிலைத் தடுப் பது நியாயமன்றென எப்படிச் சொல்லலாம். பண வருவாய் மிக்க வுடையோர், இக்காட்சி களுக்குச் செல்வது தவறாகாது. ஏழை எளியர்கள் தமது பணத்தை வியர்த் தம் செய்வதல்லாமல் பலவிதத் துன்பங்களு க்கு ஆளாவதைத் தடுப்பது பொதுஜனங்களு டையவும் நிர்வாககர்களுடையவும் பொறுப் பாகும். மேலும், இக்காட்சிகளில் காட்டப் பெறும் விநோதங்கள் கருத்திற்கிசைந்தவல்ல வென்று இராஜாங்க ரிபோர்ட்களினாலேயே தெரியவரும். கொலை, களவு, காமம் இவை போன்ற துஷ்ட லக்ஷணங்களின் விருத்தி யை நன்கு காட்டி மனத்திலூன்றும்படி செய் யும் இக்காட்சிகளை ஒழுங்குபடுத்தும் கட மை யாரைச் சேர்ந்தது ?

⁂

**இலவசக் கல்வி**

சண்டையில் இறந்த இந்தியச் சிப்பாய் களின் மக்களுக்கு இலவசப் பிரதமக் கல்வி பயிற்றுவதற்காகத் தக்க ஏற் பாடுகள் உத்தியோகமுறை யில் செய்யப்படுவது யாவர்க் கும் சந்தோஷ மூட்டும். இத்தகைய குழந் தைகளுக்கு, பள்ளியில் படிக்கும்வரை வரு ஷத்திற்கு ரூபாய் ஆறுக்கு மேற்படாத தொ கை, இவ்விஷயமாக ஏற்படும் மற்றைச் செல வுகளுக்கும் கொடுக்கப்படும். யுத்தத்தில் உயிர்துறந்த வீரர்களின் ஞாபகார்த்தமாகச் செய்யப்படும் இவ்வுதவி கொண்டாடத்தக் கதே. இலவசக் கல்வியை முற்றும் பரவச் செய்தல் இதனினும் பெருமைதரும் அன்றோ?

⁂

**ராஜகுமார கலாசாலை**

இக்கலாசாலையைப் பொதுஜன சம்மதமின் றியே ஸ்தாபிக்க அரசாங்கத்தார் மனங்கொண் டது வியக்கத்தக்க தேனும், அவ்விடத்துத் தக்க இந்தியர் களையே போதகர்களாக நிய மித்து, அங்கு படிக்கவரும் ஜமீந்தார்களின் மக்களுக்கு இந்தியாவைப்பற்றிய உண்மை ஞானத்தை ஊட்ட கவர்ன்மெண்டார் தக்க ஏற்பாடுகள் செய்வாரென நம்புகிறோம். இதுவே பல ஜமீன்தார்களின் அபிப்பிராயம்.

---

அவன் கார்க்கோடகன் தந்த ஆடையை அணிந்து தன் முன்னுருவை அடைந்ததும், தமயந்தி அன்போடு அவனை இறுகஅணைந்து, கண்களைக் கெட்டியாக மூடி, இருவர் உள்ள மும் ஒத்து ஒலிக்க, இவ்வுலகப் பிரஞ்ஞை யற்று விளங்கினாள். அவ்விஷயமுணர்ந்ததும்,

மண்களித்தது ; மாதிரங் களித்தன; மலர்மேல் பெண்களித்தனள்; பேரறங் களித்தன;கண்டோர் கண்களித்தன ; களித்தன கலைவலோர் நெஞ்சம் ; விண்களித்தன ; களித்தது வீமன்மா நகரம்.

---

ஊர் ஓரத்திற் கொல்லை, உழுதவனுக்குப் பயிர் இல்லை.